flex

# அருள்

மே 2016 கடவுளை வணங்குவோம் அருளினை பெறுவோம் விலை ரூ.50




No. 433, Galle Road,
Wellawatte, Colombo 06.
Tel: 011 4528438/5
Fax: 011 2362822


New Branch:
194, Main Street,
Colombo 11.
Tel: 011 2448870
Fax: 011 2448860

Web: www.jeyechandrans.com
Skype: jeyechandrans 888



20th Anniversary

Special Promotion for This Year.




Brintha

Herbal Beauty Care Centre

Bridal Dressing,
Photo & Videography
Package.

Brintha salon

Tel : 011 2593693, 011 2553028, 077 6331257


LAE
Little Asia
"Little Asia: for 6-yards of bridal splendour"
Dream Big | Think Big | Achieve Big
317, 317A,Galle Road, Wellawatte, Colombo 06.
T: +94 11 250 4470, 250 0098 | F: +94 11 2508934
E: info@littleasia.lk | www.littleasia.lk | skype : little.asia.emporium
73, Main Street, Colombo 11.|T: +94 11 2391592, 2391593
F: +94 11 2391745 | E: info@littleasiasilk.com
www.littleasiasilk.com |Skype: little.asia.silk

இல்லங்கள், ஆலயங்கள் தோறும்

தெய்வீக மணம் கமழ...

# விஷ்கா

ஊதுபத்திகள்

100% NATURAL
HANDMADE
AYURVEDIC




Distributed by:

Visgha
ARTS AND CRAFTS

இல.142 1/1, செட்டியார் தெரு, கொழும்பு 11.

**Manufactured by: Marhaba IMPEX Bangalore - India**

தொ.பே. **233 6192, 244 5776 Hotline: 0772 774 776 (Rayen)**

visgha.rayen@yahoo.com rayen.visgha www.visgha.net



7STORIES
Ranjanas

# New Sarees Collection

- Wedding sarees
- Homecoming sarees
- Going away sarees
- Western bridal dress
- Fashion / Designer sarees
- Office sarees
- Cholis & Salwars

No.318, Galle Road, Colombo 4.
Hotline 011 2 590 070
Find us on: facebook www.7stories.lk

AMPLE PARKING | 9AM~8.30PM | BEST SERVICE | Rs. BEST PRICE | SUPERMARKET | ATM AVAILABLE

49 ஆண்டுகளாக நன்மதிப்பைப் பெற்ற




தயாரிப்பாளர்கள்

Mcsons Organics (Pvt) Ltd.
672/3, Galle Road, Off Mayura Mw,
Ratmalana.
Phone: 2636818

ஏக விநியோகஸ்தர்கள்
பிரபா டிரேடிங் கம்பனி
31, கபோஸ் லேன், கொழும்பு 11.
Tel: 2329426, 2422750

Tel: 263 6818 Shop: 232 9426 | Fax: 263 5399 | Email: mcsons@sltnet.lk

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

# உள்ளடக்கம்



07 எமது நோக்கம்
10 செல்வ வளம் தரும் அட்சய திருதி!
11 வளம் சேர்க்கும் வைகாசி விசாகம்
12 கனவுகள் தரும் பலன்கள்
15 இந்து தர்ம சாஸ்திரம்
28 யோகா கற்றுக்கொள்ளுங்கள்
30 வளமான வாழ்விற்கு ∴ பெங் ஷுய்
31 மன அடக்கம்
33 நவ பைரவர்கள்
34 வாழ்க்கையில் வெற்றி / பெண்மையைப்...
37 ஷீர்டி சாய்பாபா
38-40 சகல செல்வங்களும் தரும் ஸ்ரீ மகாலக்ஷ்மி
41 அருள் மொழிகள்
42 தென்முகக் கடவுள்
47 திருமண பொருத்தம்
48-49 குன்றாத செல்வம் தரும் லட்சுமி குபேர...
50 சைவநெறி வினா விடை தொகுப்பு தரம் 8
51 திருக்குறள் தெளிவு
52 அன்பு நெறி
55 காலம் கொடுக்கும் வெற்றி விருந்து
56 பெண்கள் செய்ய வேண்டியதும்
65 மன்னா ஹாஹ்...ஹா!
66-68 பஞ்சாங்கம் / விரதங்கள்
71-74 ராசி பலன்கள்
77-81 பக்திக் கதைகள்




விளம்பரக் கட்டணங்கள்

| | |
|---|---|
| முழுப்பக்கம் (வர்ணம்) | ரூபா 6,000/= |
| முழுப்பக்கம் (கறுப்பு, வெள்ளை) | ரூபா 4,000/= |
| ½ பக்கம் (வர்ணம்) | ரூபா 4,000/= |
| ½ பக்கம் (கறுப்பு, வெள்ளை) | ரூபா 3,000/= |
| 1 BOX (கறுப்பு, வெள்ளை) | ரூபா 500/= |
| 1வது, 2வது, 3வது அல்லது கடைசி இரு பக்கங்களைக் கொண்ட வர்ண விளம்பரம் | ரூபா 15,000/= |


மேலதிக விபரங்களுக்கு
அழையுங்கள்: 0777 614 186

08-09 இந்து மத அர்த்தங்கள்

16-18 சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

21-27 அற்புத ஆலயங்கள்





57-60 சுபத்திரை


# Emmel Collection

DEALERS IN:
**Quality Textiles & Readymade Garments**

24A, Galle Road,
Wellawatte.
Tel: 2595567


# Jayalalitha Jewellery


No. 65, Sea Street Colombo 11.
Tel: 011-2422548, 011-5624178





# Annai HOME DECOR





Curtain & Cushion Materials and All type of Curtaining, Cushioning and Tailoring Etc.

23-A, 42nd Lane, Wellawatte.
Tel: 0774 441 298, 0757 734 548, 2 580 668



# DESIGN & PRINTING SERVICES

- ✓ Brochures
- ✓ Flyers
- ✓ Logo Creation
- ✓ Business Cards
- ✓ X-Stand/Banners
- ✓ Offset Printing
- ✓ Digital Printing
- ✓ Graphic Design Work

# BOARD FIXING

FLEX DIGITAL BOARD
STEEL STICKER BOARD
FLEX LIGHT BOX

flex GRAPHIC
www.flexgraphic.lk

No. 4, IBC Road, Wellawatte. Cell: 0777 614 186



# WORLD TEL COMMUNICATION

Net Calls, Local Calls, Postal works,
Stamps, Courier Service to all Country
Document Fast Parcel Service
Photo Copy & Printout

No : 298, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel : 0112 504 236





# Hailal


Fashion Mall
Dressing is an Art

No: 126,
Galle Road,
Wellawatte,
0112 553 678



# Siva Jewellers

Gold Jewellery Buying and Setting Centre


No: 177/4, See Street, Colombo 06.
Tel: 0112 447 272 / 0776118831



# UPCOUNTRY DTH ENTERPRISES

Recharge & Activation

dishtv videocon d2h airtel digital TV SUN DIRECT TATA Sky
airtel HUTCH Dialog Sri Lanka Telecom Mobitel etisalat

PHOTO COPY, FAX, LAMINATION, BINDING,
STATIONARY, PRINTOUT, MOBILE & ACCESSORIES

No.198, Galle Road, Wellawatte, Colombo 06
www.upcountrydth.com / email: upcountrydth@gmail.com
Tel: 0752965690 / 0778202424

# எமது நோக்கம்

**"இந்து மதத்தின் பல அரிய தகவல்களை அறியத் தருவதே"**



மனிதர்களுடைய சகல துன்பங்களுக்கும் காரணமே தன்னைப் பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதுதான். ஒப்பிட்டுப் பார்க்கும் குணமே நமக்குத் துளி கூட இல்லை என்றால் நமது நிம்மதியை யாராலும் குலைக்க முடியாது.

எப்போது ஒப்பிடுதல் தொடங்கிவிட்டதோ... அதன்பின் கீழ் என்ன? மேல் என்ன? ஒப்பிட்டுப் பார்க்கிற பழக்கம் தொடங்கிவிட்ட பிறகு அதைக் குறிப்பிட்ட எல்லையோடு நிறுத்த முடியுமா? நிச்சயம் முடியவே முடியாது. தீப்பிடிக்கத் தொடங்கிவிட்ட பிறகு அது கீழ் நோக்கித்தான் பிடிக்கும் என்பதில்லை. மேல் நோக்கியும் பாயும்.


எனவே வளர்ச்சியை அளக்க உன்னை யாரோடும் எப்போதும் ஒப்பிடாதே. நீ நீயாகவே இரு. உயர்வுகளையும், சிறப்புகளையும் நீ பெறுவதற்கு ஒப்பிட்டுப் பார்த்துத் தான் ஆகவேண்டும் என்றில்லை. வேறு பல அளவுகோல்கள் இருக்கின்றன. இந்து மதத்திலும் இறைவனுக்கு "ஒப்பிலியப்பன்" என்ற பெயர் உண்டு. இறைவனுக்கு மட்டுமல்ல எந்த மனிதனுக்கும் இணை வைக்கக்கூடாது என்பது நுட்பமான தத்துவம்.

மல்லிகையை ரோஜாவுடன் ஒப்பிடக்கூடாது இது தனி அழகு.. அது தனி அழகு... சம்பங்கியை சாமந்தியோடு ஒப்பிடக்கூடாது. இப்படி ஒப்பிடுவது இயற்கையை அசிங்கப்படுத்துகிற வேலை. இது ஒரு கலைப் படைப்பு, அது ஒரு கலைப்படைப்பு. இவற்றை ஒப்பிடுவது கலையை காரி உமிழ்வதற்கு சமம். ஒன்றை உயர்வாகவும் மற்றொன்றை தாழ்வாகவும் கடவுள் படைப்பாரா? ஒப்பிடுவது மனவளர்ச்சி அற்றவர் செயல். பிறரோடு நம்மை ஒப்பிட்டுக் கொண்டே இருந்தால் ஏற்கனவே நம்மிடம் உள்ள சிறப்பு தெரியாமல் போய்விடலாம் அல்லவா?

கே. யோகேந்திரன்

\- ஆசிரியர்

நல்வழி அருள்வழி.. அதுவே நம்வழி!

# கௌரி

## ஜுவலர்ஸ்

4/A, Fussels Lane, Galle Road, Wellawatte.

(Close to Wellawatte Market)

Tel: 2360132

Fax: 0094 1 2503471

Mobile: 077 5415526

# இந்து மத அர்த்தங்கள்

## உபநிஷதங்கள்

**வேதம்:** சம்ஹிதை, பிராம்மணம் என்னும் இரு பிரிவுகளையுடையது. சம்ஹிதை பாகத்தில், சொல்ல வேண்டிய மந்திரங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பிராம்மண பாகத்தில் யாகங்களில் செய்யவேண்டிய முறைகளும் தேவதைகளும் அதன் பலன்களும் சொல்லப் பட்டுள்ளன. இந்தச் பிராம்மண பாகத்தின் ஒரு பாகமே உபநிஷத் எனப்படும். இதில் மனிதர்களிலிருந்து தேவதைகள் வரை பிறவியில்லாத பெரும்பேற்றை அடைவதற்குச் சாதனமான ஈசுவர உபாசனை, வேதாந்த தத்துவம், பரமாத்ம ஞான விஷயமான தத்துவங்கள் முதலியவை சொல்லப்பட்டுள்ளன.

## முக்கியமான உபநிஷதங்களின் பெயர்கள்

1.ஈசாவாஸ்ய உபநிஷதம் 2.கேனோபநிஷதம் 3.கடோபநிஷதம் 4.பிரச்னோப நிஷதம் 5.முண்ட கோபநிஷதம் 6.மாண்டுக்யோப நிஷதம் 7.தைத்திரியோபநிஷதம் 8.ஐத்ரேய உபநிஷதம் 9.சாந்தோக்ய உபநிஷதம் 10.பிருஹதாரண்யக உபநிஷதம்

## கர்ம காண்டம், ஞான காண்டம்

வேதத்தில், வேள்வி முதலிய கர்மாக்களைச் செய்யும் முறைகளையும், சுவர்க்கம் முதலிய மேல் உலகங்களை அடைவதற்கான கர்மாக்களையும் விரிவாகச் சொல்வது கர்மகாண்டம்.

ஆத்ம தரிசனம் அடைவதற்கான வழிகளைச் சொல்வது ஞான காண்டம் என்னும் பகுதி ஆகும்.

உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம், கீதை இம்மூன்றையும் 'பிரஸ்தான த்ரயம் என்பர். இவை இந்து சமயத்தின் அடிப்படை நூல்களாகும்.

## மூவகையான சத்தியங்கள்

1.பிராதிபாஸிக சத்தியம் 2.வியாவஹாரிக சத்தியம் 3.பாரமார்த்திக சத்தியம் என்பன.

நதியின் தண்ணீரைப் பார்த்து தண்ணீராக நினைத்து அதில் நீராடியது உண்மை. இந்த உண்மை ஞானம், அறிவு வியாவஹாரிகம் எனப்படும்.

தண்ணீர் இல்லாத சமயத்தில் கானல் நீரைத் தண்ணீராக நினைத்துக்கொண்டு நீரைப் பருகச் சென்றது. பிரமை - உண்மையன்று. இந்த பொய் அறிவு பிராதிபாஸிகம் எனப்படும். இவ்வுலக முழுவதும் தோன்றுவதற்கு ஆதாரமானது பரமாத்மாதான். அந்த பரமாத்மாவில் இந்த உலகமானது கற்பிக்கப்பட்டுள்ளது. கற்பிக் கப்பட்ட தெல்லாம் நிஜமல்ல. வெறும் தோற்றமே. அவற்றிற்கு ஆதாரமான காரணமாக வஸ்துவானது ஒன்றுதான் எனப்படுவதே பரமார்த்திக சத்தியம் எனப்படும்.

## 'பஞ்சாங்கம்' என்று பெயர் வரக் காரணம் யாது?

திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்று ஐந்து அங்கங்களையும் பற்றிக் கூறுவதால் - இவ்வைந்து அங்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளதால் (பஞ்ச +அங்கம்) ஸ்ரீ பஞ்சாங்கம் என்று பெயர் பெற்றது.

அங்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளதால் (பஞ்ச+அங்கம்)=பஞ்சாங்கம் என்று பெயர் பெற்றது.

## நாழிகை, யாமம் விளக்கம்:

ஒரு நாள் அதாவது 24 மணி நேரம் கொண்டது 60 நாழிகையாகும். இது சூரிய உதயத்திலிருந்து கணக்கிடப்படுகிறது.

ஒரு யாமம் என்பது 3 மணி நேரமாகும். (யாமம் என்பது வழக்கில் ஜாமம் எனப்படுகிறது)

## சைவம் என்பது பொருள் கூறு:

சிவத்துடன் தொடர்புடையது சிவபெருமானைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுவது சைவம் ஆகும்.

### தமிழ் வருடங்களின் 60 பெயர்கள்:

| | | |
|---|---|---|
| 1.பிரபவ | 11.ஈசுவர | 21.சர்வசித்து |
| 2.விபவ | 12.வெகுதானிய | 22.சர்வதாரி |
| 3.சுக்கில | 13.பிரமாதி | 23.விரோதி |
| 4.பிரமோ தூத | 14.விக்கிரம | 24.விக்ருதி |
| 5.பிரஜோற்பத்தி | 15.விஷு | 25.கர |
| 6.அங்கீரச | 16.சித்திரபானு | 26.நந்தன |
| 7.ஸ்ரீமுக | 17.சுபானு | 27.விஜய |
| 8.பவ | 18.தாரண | 28.ஜெய |
| 9.யுவ | 19.பார்த்திப | 29.மன்மத |
| 10.தாது | 20.விப | 30.துன்முகி |


31.விளம்பி - ஹேவிளம்பி
32.விளம்பி
33.விகாரி
34.சார்வரி
35.பிலவ
36.பிரமாதி
37.சுபகிருது
38.குரோதி
39.விசுவாசு
40.பராபவ
41.பிலவங்க
42.கீலக
43.சௌமிய
44.சாதாரண
45.விரோதிகிருது
46.பரிதாபி
47.பிரமாதீச
48.ஆனந்த
49.ராக்ஷச
50.நள
51.பிங்கள
52.காளயுக்தி
53.சித்தார்த்தி
54.ரௌத்திரி
55.துன்மதி
56.துந்துபி
57.ருத்ரோத்காரி
58.இரக்தாட்சி
59.குரோதன
60.அட்சய

### நட்சத்திரங்கள் 27-ன் பெயர்கள்

1.அசுவினி 2.பரணி 3.கிருத்திகை 4.ரோகிணி 5.மிருகசீர்ஷம் 6.திருவாதிரை 7.புனர்பூசம் 8.பூசம் 9.ஆயில்யம் 10.மகம் 11.பூரம் 12.உத்திரம் 13.அஸ்தம் 14.சித்திரை 15.சுவாதி 16.விசாகம் 17.அனுஷம் 18.கேட்டை 19.மூலம் 20.பூராடம் 21.உத்திராடம் 22.திருவோணம் 23.அவிட்டம் 24.சதயம் 25.பூரட்டாதி 26.உத்திரட்டாதி 27.ரேவதி

தொடரும்

# பிரணவ மந்திரம்




ஓம் என்ற பிரணவத்தின் எழுத்து நட்சத்திர வடிவம், தண்ட வடிவம், குண்டல வடிவம், பிறை வடிவம், வட்ட வடிவம் என்ற ஐந்து வடிவங்களைத் தாங்கி வருகிறது.

பிரணவ மந்திரம் சமஷ்டி பிரணவம் என்றும், வியஷ்டி பிரணவம் என்றும் கூறப்படுகிறது. சமஷ்டி என்பது தொகுத்துக் கூறுவது. வியஷ்டி என்பது விரிவாகக் கூறுவது.


இனி பிரணவ மந்திரத்தின் விளக்கத்தைப் பார்ப்போம். ஓம் என்பது அகரம், உகரம், மகரம் மூன்றும் முறையே சத்துவம், ராஜசம், தாமசம் என்ற மூன்று குணங்களையும், அயன், அரி, அரன் என்ற மும்மூர்த்திகளையும், காருகபத்தியம், தட்சிணாக்கியம், ஆகவனீயம் என்ற மூன்று அக்கினிகளையம், ருக், யஜுர், சாமம் என்ற மூன்று வேதங்களையும், பூமி, அந்தரிசம், சொர்க்கம் என்ற மூன்று உலகங்களையும், காயத்ரி, திருஷ்டு, ஜகதி என்ற சந்தஸ் களையும் உடையது.

அகாரம் வாய் திறத்தினால் படைப்பையும், உகாரம் இதழ் குவித்தலினால் காத்தலையும், மகாரம் வாய் மூடுதலினால் அழித்தலையும் குறிப்பிடுகின்றது. ஓங்காரமானது நாதம், விந்து கலை இவையனைத்தும் உடையது. தேவர் களுக்கெல்லாம் பிறப்பிடமாகக் கொண்டது. பிரணவத்தின் உட்பொருளை பிரம்மனால் கூட உரைக்க முடியவில்லை.

அப்பனுக்கே உபதேசம் செய்த சுப்பன் அல்லவா அந்த முருகன். பிரணவ மந்திரத்தை அவனையன்றி மற்றவரால் அறிய முடியாது.



47-A, Sea Street, Colombo 11.
Tel: +94 11 2440042 | Fax: +94 11 2387606 | Email: arrujina47@hotmail.com




# செல்வ வளம் தரும் அட்சய திருதி!

சித்திரை மாதம் அமாவாசையை அடுத்து வருகின்ற மூன்றாம் நாளை அல்லது மூன்றாம் பிறையை அட்சய திருதியை நாளாக கருதப்படுகிறது. இதன் சிறப்புகள் பற்றி பல்வேறு புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

அட்சயம் என்றால் குறையாமல் வளர்ந்து கொண்டே இருப்பது. என்றும், அழிவின்றி வளர்வது, பூரணமானது குறையாதது. அழியாத பலன்களை அள்ளி தருவது போன்ற அர்த்தத்தை குறிப்பதாகும்.

செல்வத்தின் அதிபதியான குபேரன் தான் இழந்த சங்க நிதி, பதுமநிதிகளை பெற்றது அட்சய திருதியை நாளில் பாத்திரத்தை பெற்றதும் இந்நாளேலே. மணிமேகலையும் அட்சய பாத்திரம் பெற்றதும் இந்நாளில் தான்.

அனைத்து வளங்களையும் இழந்து பிச்சாடனரான சிவபெருமான் தன் கையில் இருந்த கபாலத்தில் அன்னபூரனியிடம் இருந்து உணவு பெற்று பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுபட்டதும் இந்த அட்சய திருதியை நாளில் தான்.

செல்வத்திற்கு அதிபதியான குபேரனை வணங்கினால் செல்வ வளம் பெருகும் என்பது நம்பிக்கை. குபேர வழிப்பாட்டின் போது மகாலட்சுமியையும் வணங்க வேண்டும் இதனால் வழிப்பாட்டின் முழுபலனும் கிடைக்கும்.

இன்றைய தினத்தில் நாம் செய்யக்கூடிய புண்ணிய காரியங்கள் யாவும் நம்முடைய வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க தக்க புண்ணிய பலன்களை வாரி வழுங்கும். இந்நாளில் தங்கம் தான் வாங்க வேண்டும் என்ற எந்த கோட்பாடும் இல்லை மங்களகரமான எந்த பொருளும் அவரவர் தகுதிக்கேற்ப வாங்கி பலன் பெறலாம்.

அட்சய திருதியை தினத்தன்று அதிகாலை யிலையே எழுந்து நீராடி தூய ஆடையணிந்து, பூஜை அறையில் கோலமிட்டு விளக்கேற்றி மகாலட்சுமி மகாவிஷ்ணு சமேத வீற்றிருக்கும் படத்தை வைத்து, அதனோடு குபேர சிலையும் வைத்து பூமாலை போட்டு, பால், கற்கண்டு, பழம் என்பன நிவேதனம் செய்து தூப தீபம் காட்டி வழிப்பட்டால் சகல ஐஸ்வரியங்களும் பெருகும். வாழ்வும் வளம் பெறும்.

*திருமதி. பவானி பாலசுப்ரமணியம்*
*வெள்ளவத்தை*





# வளம் சேர்க்கும் வைகாசி விசாகம்

வைகாசி விசாகம் என்றதுமே நம் அனைவருக்கும் நினைவுக்கு வருபவர் வைகாசி வேந்தனாம் விசாகப் பெருமானாகிய தமிழ் கடவுளாம் முருகப் பெருமான். அவரது அவதார தினமே வைகாசி விசாகமாகக் கொண்டாடப் படுகிறது.

தமிழ் மாதங்களில் இரண்டாம் மாதமான வைகாசியில் முழு நிலவு விசாக நட்சத்திரத்தன்று வரும். அதுவே வைகாசி விசாகம் ஆகும். எல்லா முருகன் ஆலயங்களிலும் அன்று விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். இந்த நாளில் சூரிய பகவான் முருகனை வழிப்படு வதாகவும் இதே நாளில் பக்தர்கள் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபட்டால் சகல காரியங்களிலும் சித்திக் கிட்டும்.

ஆறுமுகன் ஆறு வயதுவரை பால லீலைகள் புரிந்தார். ஞானப்பழம் கேட்டு கோபித்துக் கொண்டு வந்ததும் பிரணவத்தின் பொருள் தெரியாத பிரம்மனை சிறையில் அடைத்ததும், தந்தைக்கே பிரணவத்தின் பொருளை உபதேசித்து தகப்பன் சாமி ஆனதும், ஔவையிடம் சுட்டபழம், சுடாத பழம் கேட்டதும் அவருடைய திருவிளை யாடல்களுக்கு அளவே இல்லை.

வைகாசி விசாகம் குருவுக்குரிய நட்சத்திரம் திருச்செந்தூரில் குமரக்கடவுள் குருவடிவமாக காட்சி தருகிறார். அதனால் குருதோசம் உள்ளவர்கள். குருவின் அருள் சரிவர கிட்டாதவர்கள் திருமணத்தடை உடையவர்கள், வியாபாரத்தில் நஷ்டமடைந்தவர்கள் இங்கு வந்து கந்தனை, விரதமிருந்து வழிப்பட்டால் குறைகள் எல்லாம் தீரும். குமரன் அருளும் கிட்டும்.

ஆண்டு முழுவதும் சந்தனக் காப்பிலிருக்கும் அஹோபிலம் நரசிங்க மூர்த்தி வைகாசி மாத விசாகத்தன்று தான் சந்தன காப்பினை களைந்து பக்தர்களுக்கு காட்சி தருகின்றார். பன்னிரு ஆழ்வார்களில் முதல் ஆழ்வாராகிய நம்மாழ்வார் அவதரித்த தினமும் இந்நாளிலே மாதவ மாதம் எனப்படும் வைகாசிமாதம் விசாகத் தினத்திலே துளசி இலைகளால் கிருஷ்ணரை பூஜித்து வைஷ்ணவர்கள் புண்ணிய பேறினை பெறுகின்றனர்.

வைகாசி விசாகத்தினத்தன்று தான் புத்த பெருமான் அவதரித்தார். இத்தினத்தில் தான் ஞானம் பெற்றார். பரிநிர்வாணம் அடைந்தார். இந்நாளை பௌத்தர்கள் “புத்த பூர்ணிமா” என போற்றுகின்றனர். நம் நாட்டில் பௌத்தர்கள் இந்நாளை வெசாக் பண்டிகையாக கொண்டாடு கின்றனர்.

இந்நாளில் நாடுமுழுவதும் வெசாக் தோரணங்கள், தண்ணீர்ப்பந்தல்கள், அன்னதானங்கள், வெசாக் பந்தல்களில் புத்த பகவானுடைய வாழ்வியல் சிறப்புகள், ஞானம் பெற்றது. பரிநிர்வாணம் அடைந்தது என புத்தருடைய வாழ்க்கை சரித்திரத்தை காணக்கூடியதாக இருக்கும்.

இப்புண்ணிய நன்நாளில் விரதமிருந்து ஆலயம் சென்று முருகப்பெருமானையும், புத்த பகவானையும் வழிபட்டு சிறந்த அருளையும், ஞானத்தையும் பெறலாம்.

*திருமதி. பவானி பாலசுப்ரமணியம்*
*வெள்ளவத்தை*



# கனவுகள் தரும் பலன்கள்

## கனவில் காய்கறிகள்

**அவரைக்காய்:** அவரைக்காய் அல்லது கொடி அல்லது அவரைப்பூ இவைகளைக் கனவில் கண்டால் நல்ல பலன்கள் ஏற்படும். அவரைக்காயை உண்பதாகக் கனவு கண்டால் வியாதிகள் உண்டாகும். வீண்வம்பு வழக்குகள் உண்டாகும்.

**அத்திக்காய்:** அத்திக்காயைக் கனவில் கண்டால் உடல் நலமடையும்.

**கிழங்கு வகைகள்:** கனவில் கிழங்கு வகைகளில் எதையாவது சாப்பிடுவதாகக் கனவு கண்டால் உடல் நலமடையும். பணவரவுகள் உண்டு.

**சுரைக்காய்:** சுரைக்காயைக் கனவில் கண்டால் உடல் பலமடையும்.

**வெங்காயம்:** வெங்காயத்தைப் பார்ப்பதாக, அல்லது சாப்பிடுவதாகக் கனவு கண்டால் பொருள் வந்து சேரும், வெங்காயத்தை உரிப்பதாகக் கண்டால் பொருள் நட்டம் உண்டாகும். விஷக்கிருமிகளால் வியாதிகள் பரவும்.

**வெண்டைக்காய்:** இதை பச்சையாகவோ சமைத்தோ சாப்பிடுவதாகக் கனவு கண்டால் செல்வம் மேலும் மேலும் வளரும்.

**பீர்க்கன்காய்:** இதைக் கனவில் கண்டால் வயிற்றுக் கோளாறுகள் உண்டாகும்.

**கீரைவகைகள்:** கீரைகளை கனவில் கண்டாலும், உண்பதாகக் கண்டாலும் உடல் நலம் அடையும்.

**பாவக்காய்:** இதைக் கனவில் கண்டால் கெட்ட காரியங்கள் நடக்கும்.

**வெள்ளைப்பூண்டு:** இதைக் கனவில் கண்டால் பெண்களால் கேடு உண்டாகும்.

**முட்டைக்கோஸ்:** இதைக் கனவில் கண்டால் எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**முள்ளங்கி:** இதைக் கனவில் கண்டால் பணவசதி பெருகும்.

பொதுவாகச் செடிகள் பூத்துக் குலுங்குவது போல் கனவு கண்டால் இல்லறம் இனிதாக இருக்கும்.

**முள்செடியைக்:** கனவில் கண்டால் முன்கோபத் தாலும், அவசரக் குடுக்கைத் தனத்தாலும், நண்பர்களை இழக்க வேண்டிய சூழ்நிலை வரும். தவறான எண்ணங்கள் காரணமாக விரோதங்கள் ஏற்படலாம்.

தொடரும்




UTV DIGITAL STUDIO
ULTRA TECH VISUALS
Since 1993
UTV Digital Studio (Pvt) Ltd
PHOTOGRAPHY - VIDEO PRODUCTIONS - CINEMATOGRAPHY
AERIAL VIEW - ADVERTISING - ACADEMY - MODELING STUDIO
E mail: utvdigital@gmail.com - Web: utvdigitalstudio.com - FB: utvdigitalstudio
PASSPORT VISA / NIC PHOTO
PHOTO FRAMING
MODELING STUDIO
VHS to DVD TRANSFER
AERIAL VIEW PHOTO & VIDEO
# 142 1/3, GALLE ROAD
(NEAR WELLAWATTA POLICE STATION)
COLOMBO 06
Tel: 0112 363 342
Mob: 0714 122 192




# PRASANNA

## MONEY EXCHANGE (PVT) LTD











No. 57, Galle Road, Colombo 06.

**Tel : 2 591 420, 2 591 421**

**Mobile: 077 948 4211 / 077 406 5484**

Fax : 2 504108

Email : prasannaexchange@gmail.com

Money changer Permit No. ECD/MC/0058 A

***Parking Available***




# இந்து தர்ம சாஸ்திரம்

நாம் யாரை நினைக்கிறோமோ அவராக மாறிவிடுகிறோம். சர்வக்ஞனாக எல்லாம் உணர்ந்தும் சித்தத்தில் கொஞ்சம் கூட சலனமில்லாமல் சதா ஆனந்த ஸ்வரூபியாக ஈஸ்வரன் இருக்கிறான். அவனை நினைக்க ஆரம்பித்தால் நாமும் அப்படி ஆகலாம். ஆகியும் விடுவோம்.

உலகத்திற்குள் எவன் மகா புத்திமானோ எவன் புத்தி அதிக சூக்ஷ்மமானதோ, நல்ல கத்தியின் கூர் எப்படி இருக்கிறதோ அப்படிப்பட்ட கூர்மையான புத்தி உடையவனாகக் கூர் உடையவனாக எவன் இருக்கிறானோ அவன் பட்ட மரம் மாதிரி சலனம் இல்லாத மனசு உடையவன் ஆக வேண்டும். காமத்தினாலோ குரோதத்தினாலோ அவன் மனம் சலனம் அடையாமல் பேதலிக்காமல் இருந்தால் அதுதான் ஆனந்தம்.

குழந்தைக்கு மேஷ லக்னத்தில் அட்சரப்பியாசம் ஆரம்பித்தால் மூடனாவான் ரிஷிபமானால் வித்தை அதிகம் உண்டாகும். மிதுனமானால் பண்டிதனாவான். கடகமானால் பலமொழி வித்வானாவான். சிம்மமானால் சிற்ப சாஸ்திரனாவான். கன்னியானால் தாய்மொழியில் பிரபலமாவான். துலாமானால் வியாபாரியாவான். விருச்சிகமானால் சஞ்சாரியாவான். தனுசுவானால் எதிலும் ஸ்திர குணம் இருக்காது. மகரமானால் சங்கீதஞான முடையவனாவான். கும்பமானால் பிரகாசமின்றியிருப்பான். மீனமானால் சகல சாஸ்திரங்களை அறிவதோடு கடல் கடந்தும் சென்று புகழடைவான். விஜய தசமியன்று சுப லக்னத்தை தேர்ந்தெடுத்து அட்சரப்யாசம் செய்வது மிக மிகச் சிறப்பு ஆகும்.

வீட்டுக்கு வந்த ஒருவனுக்கு அவன் கேட்காமலே தாக சாந்திக்கு தண்ணீர் கொடுப்பவனும், சோர்வுடன் வருபவர்களுக்கு ஓய்வு எடுக்க பாய் கொடுப்பவனும். தனக்கு கஷ்டமிருந்தும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இனிமையாகப் பேசி சமாளிப்பவனும் பெரிய பூஜை செய்த பலனை அடைகிறார்கள்.


ஒரு மருந்தை வாங்கி உபயோகிக்காமல் கொஞ்சநாள் வைத்திருந்தால் அதன் வீரிய சக்தி குறைந்துவிடும். அப்படியே வேதத்தை அடிக்கடி அப்பியாசம் பண்ணாமல் இருந்தால் அந்த மந்திரங்களின் சக்தி குறைந்துவிடுகிறது. அந்த வீரிய சக்தியைத் திருப்பி உண்டு பண்ணுவதற்குப் பூஜை பண்ணி ஹோமம் பண்ணி பல அபிவிருத்திகள் உச்சாடனம் பண்ண வேண்டும். தவறுகளுக்கு எல்லாம் பிராயச்சித்தமாக இருப்பது காயத்திரி ஜபம் ஆகும்.

தொடரும்

## சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

## (ஆன்மிக ஐயம்)





# பிரபஞ்சம் என்றால் என்ன?

கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட படைப்பு முழுவதற்கும் பிரபஞ்சம் என்று பெயர். பொதுவாக நாம் வாழும் உலகம் போல் உள்ள எல்லா அண்டங்களையும் பிரபஞ்சம் என்பது குறிக்கும்.

UNIVERSE என்று விஞ்ஞானிகள் பொருள்தான் பிரபஞ்சம் எனப்படுவது. ஒரு சூரியன் ஒன்பது கிரகங்கள் விண்மீன்கள் கொண்ட ஒரு பகுதிக்குச் சூரிய குடும்பம் என்று பெயர்.

இதுபோல் கோடிக்கணக்கான சூரியக்குடும் பங்களைக் கொண்டது பிரபஞ்சம் ஆகும்.

“அண்டப்பகுதியின் உண்டைப்பிறக்கும்
அளப்பருந் தன்மை வளப்பெரும் காட்சி
ஒன்றினோடு ஒன்று நின்றுஎழில் பகரின்
நூற்றொரு கோடியஜன' மேற்பட விரிந்தன”

என்று மாணிக்கவாசக சுவாமிகள் தமது ஞானக்கண்ணால் பார்த்து நூற்று ஒரு கோடிக்கும் மேலாக உள்ளன இவ்வண்டங்கள் என்று கூறியுள்ளார்.

விஞ்ஞானிகள் கருத்தும் இதை உறுதிசெய் வதாகவே உள்ளது.

ஆகமங்களில் இவைகளின் எண்ணிக்கை, பெயர், ஆட்சி, நிறம், வடிவம், அங்குள்ள, பொருள்கள் எனப் பலவற்றையும் கூறி உள்ளார்கள்.

பிரபஞ்சத்தை மனத்தால் நாடி அளந்த மகான்கள் நிறைய பேர் நம் முன்னோர்கள். இப்படி நினைப்பதே ஒரு பிரபஞ்ச பயணம் ஆகும்.

## 'துர்க்கை' என்ற பெயருக்கு என்ன அர்த்தம்?



'தூர்கா' என்ற சம்ஸ்கிருத சொல்லைத் தமிழில் 'துர்க்கை' என்று வழங்குகிறோம். 'துர்கா' என்றால் துன்பத்தைப் போக்குபவள், கோட்டைப்போல் இருந்து பக்தர்களைப் பாதுகாப்பவள்' என்பது பொருள்.



## இறைவனிடம் பிரார்த்தனை செய்யும் போது, எதைக் கேட்டுப் பிரார்த்தனை செய்வது மேலான பிரார்த்தனை?

உத்தம பக்தர்கள் இறைவனிடம் வேறு எதையும் கேட்காமல், இறைவனையே கேட்டுப் பிரார்த்தனை செய்வார்கள்.

## "சச்சிதானந்தம்" என்பதற்கு சைவ சமயம் சார்ந்த விளக்கம் என்ன?



அனுபூதியில் தெய்வத்தைத் தரிசித்த மெய்ஞானிகள் கடவுளின் இயல்பை 'சத் - சித் - ஆனந்தம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஸத் - என்றென்றைக்கும் இரப்பது. சித் - எல்லாம் அறிவது:, அறிவுமயமானது. ஆனந்தம் - ஆனந்தமே உருக்கொண்டது. சிவாலயத்தில், கர்ப்பக்கிருகத்தில் உள்ள சிவலிங்கம் - சத்: தட்சிணாமூத்தி சித்: நடராஜர் - ஆனந்தம் என்று மூன்றாக வழிபடுகிறோம்.



## யந்திரங்களை வீடுகளில் வைத்துப் பூஜிப்பது எப்படி?

தெய்வத்தை விக்கிரகத்திலும் படத்திலும் பூஜிப்பது போலவே, யந்திரத்திலும் வீடுகளில் பூஜிக்கலாம். யந்திரம் எந்தத் தெய்வத்தினுடையது, அதன் மந்திரம் எது, பூஜை முறை எது என்பதைத் தகுந்த குருமார்களிடம் உபதேசம் மூலம் அறிந்து கொள்ள வேண்டும்.



## 'வனமாலி' என்றால் என்ன?

கதம்ப மலர்களாலும், பல நிறங்களைக் கொண்ட மலர்களாலும் கட்டப்பட்ட மாலையை 'வனமாலை' என்று சொல்வார்கள். இந்த மாலையை அணிந்திருப்பவர் என்பதனால் திருமாலுக்கு 'வனமாலி' என்றும் ஒரு பெயர் ஏற்பட்டது.

## சரணாகதி என்றால் என்ன?



தன் பலத்தை நம்பாமல் பூனைக்குட்டி தன் தாயை நம்பியிருப்பதுபோல் இறைவனை நம்பியிருப்பது, நல்ல இடமோ கெட்ட இடமோ காற்றடிக்கும் திசைக்குக் காய்ந்த சருகு செல்வது போல் எந்தச் சூழ்நிலையிலும் இறைவனின் இச்சைப்படி நடந்துகொள்வது, இறைவனையே முழுவதுமாக நம்பி அவனிடம் நம்மை நாம் ஒப்படைத்துவிடுவது என்று, சரணாகதி தத்துவத்திற்குப் பல விளக்கங்கள் உண்டு.

பொதுவாக மனிதன் தன் உண்மை நிலையை நினைத்துப் பார்ப்பதில்லை. புரிந்து கொள்வதில்லை, உணர்வதில்லை. இதற்கு மாறாக, அவன் தன் உண்மை நிலையை உணர்வானானால் நிச்சயம் அவன் இறைவனிடம்தான் சரண் புகுவான்.

அகங்கார, மமகாரங்கள் உள்ள வரையில் மனிதனுக்கு மன அமைதி கிடைப்பதில்லை. மாறாக, 'இறைவா! எல்லாம் உன் செயல்' என்ற மனப்பான்மை வந்துவிட்டால், அப்போது தலையிலிருந்து ஏதோ ஒரு பெரிய பாரம் இறங்கி விட்டதைப் போல் மனநிம்மதி கிடைக்கிறது.

இறைவன் ஒருவனே நிலையானவன், உறுதியானவன். உலகில் மனிதன் எதையாவது பற்றித்தான் வாழ வேண்டும் என்ற நிலையில் இருப்பதால், இறைவனையே பற்றி வாழ வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், நமது வாழ்க்கைப் பயணத்துக்கு இறைவன் தலைமை தாங்கட்டும் என்று நினைப்பது சரணாகதி.




## 'கௌஸ்துபம்' என்றால் என்ன?

தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய முக்கியமான ரத்தினங்களில் ஒன்று கௌஸ்துபம். அதுகோடி சூரியர்களின் ஒளி கொண்டது என்று சொல்லப்படுகிறது. அதைத் தம் மார்பில் அணிய விரும்பித் திருமால் ஏற்றுக் கொண்டார் என்று பாகவதம் கூறுகிறது.

ஸ்ரீகிருஷ்ணன் அவதரித்தபொழுது, 'கல் - சோபி கௌஸ்துபம் - அவருடைய கழுத்தில் கௌஸ்துபம் இருந்தது' என்று பாகவதம் குறிப்பிடுகிறது.



No. 45, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel: +94 112 505 440
Email: info@benzaar.lk Skype: benzaar.lk Web: www.benzaar.lk




**The latest modern Dental Equipments specialty imported with X-Ray Facility**

- Tooth Whitening
- Tooth Coloured Fillings
- Root Canal Treatments
- Crown & Bridges
- Implants
- Painless Extractions
- Impactions
- Scaling & Polishing
- Dentures
- Orthodontic Treatments (Braces)
- Gum Treatments
- Pedodontic Treatments (For Children)

**Working days**

Mondays to Saturday & Poyadays - 9.00 am to 8.30 p.m
Sunday - 9.00 a.m to 1.30 p.m (Also by Appointments)

Moderate Charges
Personal Attention

## Chandrika's Dental Care

**Multi Speciality Dental Clinic**

40A, Galle Road, Wellawatte, Colombo 06. (Next to HSBC Bank)
Please call for Prior Appointments: **011 2502500 / 011 2502644**

flex அருள்
ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்



# அற்புத ஆலயங்கள்

## இந்தியா / இலங்கை

கொழும்பு, கொம்பனித்தெரு -
ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவில்




# 81. திருஅவளிவநல்லூர்

**கும்பகோணம் - நீடாமங்கலம் இடையில் உள்ளது. பஸ்வசதி உண்டு. திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் இத்தலத்தைப் போற்றிப் பணிந்து பாடியுள்ளார்கள். இக்கோயிலில் கலை வண்ணமும் சிற்பிகளின் கை வண்ணமும் பெரும் சிறப்பைத் தருகிறது.**

**இறைவன்: சாட்சி நாதர்.**

**இறைவி: சௌந்திரநாயகி**

இத்திருக்கோவில் பஞ்சாரண்ய தலங்கள் என்பதில் இரண்டாவதாகக் கருதப்படுகிறது.

இத்தலம் புல்லாரண்யம், பாதிரிவனம், சாட்சி நாதபுரம் என்னும் பல பெயர்களைப் பெற்றுள்ளது. இக்கோவில் மாடக் கோபுரம் எதுவுமின்றி இரண்டு பிராகாரங்களுடன் விளங்குகிறது.

வெளிப்பிராகாரத்தில் அம்பிகையின் திருக் கோவிலும் வசந்த மண்டபமும், மடப்பள்ளியும் உள்ளன.

மூலவிக்ரகம் எழுந்தருளியுள்ள பிராகாரத்தில் அனைத்து பரிவார தேவதா மூர்த்திகளும் உள்ளன. மூலலிங்கம் சுயம்புமூர்த்தி.

கர்ப்பகிரகத்தில் ஈசன் உமையம்மையுடன் காட்சி கொடுத்து சாட்சி சொன்ன தோற்றத்தைச் சிலாரூபத்தில் தரிசிக்கலாம்.

சுவாமியைச் சுற்றியுள்ள உட்பிராகாரத்திலுள்ள தென்கிழக்கு மூலையில் இரு கணபதி, நால்வர், கண்ணுவர், வீரபத்திரர், தென்பக்கம் சப்த கன்னியர், அறுபத்து மூன்று நாயன்மார்கள், தக்ஷிணாமூர்த்தி, மேற்கு பக்கம் தலவிநாயகர், சோமாஸ்கந்தர், பரிவார உற்சவ மூர்த்திகள் காணலாம்.

ஆறுமுகன், அண்ணாமலையார், மஹாலக்ஷ்மி வடக்கு பக்கம் பிரம்மன், துர்க்கை, சண்டிகே சுவரர், நடராஜர், வட கிழக்கில் மஹாலிங்கம், விசாலாக்ஷி, விசுவநாதர், தவக்கோல அம்மையார், சூரியன், பைரவர், நவக்கிரகங்களைத் தரிசிக்கலாம்.

இக்கோவில் சுவாமி புஷ்கரணி சிவபுஷ்கரணி எனும் பெயருடன் விளங்குகிறது. அதேபோல் பாதிரி மரம் தலவிருக்ஷமாக விளங்குகிறது.

ஆகம சாஸ்திரப்படி அநுதினமும் காலை, உச்சி, மாலை, அர்த்தயாமம் எனும் நான்கு கால பூஜைகளும் தவறாது நடக்கின்றன.

தை அமாவாசை திர்த்த வாரிப்பெருவிழாவாகக் கொண்டாடப்படும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# 82. விருத்தாசலம்

**சென்னை - திருச்சி மார்க்கத்தில் விருத்தாசலம் அமைந்துள்ளது. இக்கோவிலுக்குத் திருப்பணி செய்த பெருமை கண்டராதித்த சோழனின் மனைவி செம்பியன் மாதேவியைச் சேரும். அப்பர் பெருமானின் சகோதரியாருக்கும் இத்திருப் பணியில் பெரும் பங்குண்டு என்று கூறப்படுகிறது.**

**இறைவன்: விருத்தகிரீஸ்வரர்**
**இறைவி: விருத்தாம்பிகா**

மதுரை மீனாக்ஷி சமேத சுந்தரரேசர் கோவிலைப் போல், ஊரின் மத்தியில் இப்பழம்பெரும் சிவபதி அமைந்துள்ளது.

இது ஒரு பாடல் பெற்ற சிவத்தலம். சிறப்பான சிவத்தலங்கள் 1008-ல் தலையாய நான்கு கோவில்களில் இதுவும் ஒன்று! இக்கோவில் ஒரு கற்பாறை மீது அமைந்துள்ளது.

கோவில் மூலவருக்கு பழமலை நாதர் எனவும் பெயருண்டு. அதே போல் அம்மனுக்குப் பெரிய நாயகி என்றும் ஒரு பெயருண்டு.

இங்கே எழுந்தருளியுள்ள இன்னொரு அம்மனின் திருநாமம் பாலாம்பிக்கை.

குரு நமசிவாயர் என்ற சிவபக்தர் ஒரு நாள் இரவு இத்திருக்கோவிலில் தங்கும் படியான சந்தர்ப்பம் ஏற்பட்டது! ஈசனையும் ஈசுவரியையும் தரிசித்துவிட்டு, பசி தாளாமல் ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தார்.

பசி தாளாமல் அம்மனைப் பணிந்து பாடினார். அந்த பாட்டில் பெரிய நாயகி எனும் கிழத்தி என்று அம்மனைப் புகழ்ந்து பாடினார்.

அடியவரின் பாடலுக்கு ஏற்ப அம்மன் கிழவிபோல் தோற்றம் கொண்டு அடியவர் முன் பிரசன்னமானார். அடியவர் நிலம் கிடந்து சேவித்தார்.

அம்மையார் புன்னகை அரும்பு மலர, "பக்தா! என்னைக் கிழவியாக பாவித்துப் பாடினாயே! கிழவி உனக்கு எப்படி சோறு கொண்டு வருவாள்" என்று வினவினாள்.

அடியவர் தவற்றை உணர்ந்து, "பாலாம்பிகை எனும் வாலைக்குமரி குரு நமசிவாயர் முன் தோன்றினாள். அன்னம் இட்டாள். பசியும் தீர்த்தாள்" என்னும் பொருள்படப் பாடினார். ஆண்டவன் அடியவர் முன்னால் பாலாம்பிகையாக வந்து பசியைப் போக்கி அருள் செய்தாள்.

இத்திருக்கோவிலில், கோவில் கொண்டுள்ள பெரிய நாயகி, விருத்தகிரீஸ்வரர் வரப்பிரசாதி.

பிரம்மாண்டமான பிராகாரங்களும் மண்டபங்களும் கொண்ட இத்திருக்கோவில் தரிசிக்க வேண்டிய அற்புதமான ஆலயமாகும்.

இக்கோவிலில் கோபுரங்கள், நந்திகள், பிராகாரங்கள், காவல் தெய்வங்கள், கொடிமரங்கள் என்று எல்லாமே ஐந்து என்ற கணக்கில் அமைக்கப்பட்டுள்ளன.

# 83. உடுமலை

**உடுமலை பழனி மார்க்கத்தில் மடத்துக் குளத்திலிருந்து வடக்கே சுமார் 10 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. கொங்கு நாட்டிலுள்ள சிறப்புமிக்க ஆலயங்களுள் இதுவும் ஒன்று. மருதீசர் என்று போற்றப்படும் இத்திருக்கோவில் 900 ஆண்டுகள் பழமையானது என்று வரலாறுகள் மூலம் சொல்லப்படுகிறது.**

**இறைவன்: அர்ச்சுனேஸ்வரர்**

**இறைவி: கோமதி**

இக்கோவில் தலவிருக்ஷம் மருதமரம். மருதவனத்தில் எழுந்தருளியிருப்பதால் மருதீசர் எனும் திருநாமம் பெற்றார். வடமொழியில் அர்ச்சுனம் என்றால் மருதமரம்.

சிவலிங்கப் பெருமானின் திருவுருவம் நல்ல உயரத்துடன் கம்பீரமாக காட்சி அளிக்கிறது.

இச்சிவலிங்கம் அமராவதி ஆற்று தீரத்தில் சுயம்பு லிங்கமாக கண்டெடுக்கப்பட்டது. விக்ரம சோழனால் இக்கோவில் கட்டப்பட்டது.

ஈசன் சந்நதிக்கு வலதுபுறம் கோமதி அம்மனுக்குத் தனிச்சுற்றுடன் கூடிய கோவில் அமைந்துள்ளது.

மருதீசர் அவரை அண்டிவரும் பக்தர்களுக்கு நோயின்றி நல்வாழ்வு பெற மருந்தீசுவரராகவும் விளங்குகிறார்.

நாகதோஷம், மாங்கல்ய தோஷம் உள்ளவர் மருதீசர் அருளால் நிவர்த்தி பெறுகின்றனர்.

கோமதி அம்மன் சமேத அர்ச்சுனேஸ்வரரை வழிபட்டால் சந்தானபாக்கியம் கிட்டும். குடும்பத்தில் சகல சௌபாக்கியங்களும் பொங்கிப் பெருகும்.

**தவறைத் திருத்திக் கொள்ள முயல்பவனே நல்லவன்.**
**இயற்கையை மாற்றும் தெய்வீக சக்தி நம்முள் இருக்கிறது.**
**வாழும் காலத்திலேயே நல்லதை செய்துவிடுங்கள்.**

# 84. அய்யம்பேட்டை

**கும்பகோணம் - தஞ்சாவூர் மார்க்கத்தில் இப்புண்ணிய க்ஷேத்ரம் அமைந்துள்ளது. சதுர்முக பிரம்மன் சாப நிமித்தம் சக்ரவாகப் பறவையானார். பறவை உருவில் இத்தலம் வந்து, சுவாமி புஷ்கரணியில் நீராடி கமலபுஷ்பங்களால் சிவலிங்கப் பெருமானை வழிபட்டு சாப விமோசனம் பெற்றார்.**

**இறைவன்: சக்ரவாகேஸ்வரர்**
**இறைவி: ஸ்ரீ சக்ரலோக நாயகி**

இத்தலத்தில் திருமால் திருசடைப்பெருமானிடமிருந்து சக்ராயுதம் பெற்று போருக்குப் புறப்பட்டதால் இத்தலத்திற்குத் திருச்சக்ரப்பள்ளி என்று பெயர் ஏற்பட்டது.

ஞானசம்பந்தரின் பாடல் பெற்ற தலம்.

குபேரன், பிராமி ஈசனைப் பூஜித்து தாங்கள் இழந்த செல்வங்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றனர்.

இக்கோவில் உள்ளே நுழைந்ததும் ஸ்ரீ சக்ரலோக நாயகி, தெற்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சி தருகிறாள்.

இங்கு சதா சர்வகாலமும் எரிந்துகொண்டேயிருக்கும் குண்டத்தில் குங்குலியத்தை போட்டு வழிபட்டால் மாங்கல்ய பாக்கியம் நிலைக்கும்.

தென் திசையில் வடக்கு நோக்கி காட்சி தரும் சிவதுர்க்கையை வழிபடுவோர்க்கு எமபயம் நீங்கும்.

கர்ப்பகிரஹத்தில் திருசக்கரலிங்க வடிவில் அருட்காட்சி தரும் ஈசன், பக்தர்களுக்கு அருள் தரும் வள்ளலாக விளங்குகிறார்.

வெளிப்பிராகாரத்தில் பைரவர், சூரியன், சந்திரன், தக்ஷிணாமூர்த்தி, மகாகணபதி, வள்ளி, தெய்வானை, சமேத மயில் வாகனப்பெருமான், லிங்கோற்பவர், சண்டிகேசுவரர் கோஷ்ட மூர்த்தங்களைத் தரிசிக்கலாம்.

சக்ரவாகேஸ்வரர், சப்தஸ்தான திருவிழாவில் உலா வருவது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

திருசக்ரவாகேஸ்வரரை வணங்குவதால் நவக்கிரகத்தை வழிபட்ட பலன் கிட்டும் அதனால் இங்கு நவக்கிரக சன்னதி கிடையாது. ஈசனருள் பெறுவோர் நவக்கிரகதோஷ நிவர்த்தி பெற்று ஆயுள் ஆரோக்கிய ஐசுவரியத்துடன் வாழ்வாங்கு வாழ்வர்!

தொடரும்

## மகிழ்ச்சியான வாழ்விற்கு ௰ தாரக மந்திரம்

- சாந்தமாக பேசுங்கள்
- சுவையாக சாப்பிடுங்கள்
- போதுமான நேரம் உறங்குங்கள்
- பொறுமையாக பணி செய்யுங்கள்
- உண்மையாக இருங்கள்
- எதார்த்தத்தை புரிந்துகொள்ளுங்கள்
- சரியாக திட்டமிடுங்கள்
- நேர்மையாக சம்பாதியுங்கள்
- தொடர்ந்து சேமியுங்கள்
- நாகரீகமாக நடந்துக் கொள்ளுங்கள்
- எதிர்பார்ப்பின்றி அன்பு செலுத்துங்கள்


## இறைவனை வணங்கும்போது...

இறைவனை வணங்கும்போது இரண்டு கைகளையும் ஒன்றுக்கொன்று அழுத்தமாக சேர்ந்திருக்கும் வகையில் வணங்கக்கூடாது. கைகளை தாமரை மொட்டுப் போல் குவித்து வைத்தே வணங்க வேண்டும். அப்போது விக்ரகத்திலிருந்து ஒருவித காந்த சக்தி வெளிப்படும். அவை பஞ்சபூத சக்தியாகப் பிரிந்து விரல்கள் வழியாக மூளையைச் சென்றடைந்து உடல் முழுவதும் வேகமாகப் பரவும். அப்போது புத்துணர்ச்சி ஏற்படும்.

பூமி சக்தி சுண்டு விரல் மூலமாகவும், தண்ணீர் சக்தி மோதிர விரல் மூலமாகவும், அக்னி சக்தி நடுவிரல் மூலமாகவும், வாயு சக்தி ஆட்காட்டி விரல் மூலமாகவும், ஆகாய சக்தி பெருவிரல் மூலமாகவும் நம்மை வந்தடைகிறது. இத்தகைய புத்துணர்ச்சியுடன் செய்யும் செயல்கள் வெற்றி பெறும் என்றும்: இதுவே இறையருள் என்றும் நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.


Specialist in Guaranteed
Gold Covering Jewellery
All kind of whitening cream
available here
Wedding Jewels for Rent
MFJ
MIRACLE FASHION JEWELS
#391A, Galle Road, Colombo 06 | Tel : 0112363761, 0779397500


Lay's
NATURAL
SEA SALTED
Cheddar & Sour Cream
Barbecue
Wavy
AuGratin
Sour Cream & Onion
Happiness is simple
SSS
Sri ShanmukhaS
PARLE
Parle-G
GOLDEN ARCS
nutri CHOICE
Heavens
nutri CHOICE
Digestives
MILANO
CENTRE FILLED
Haldiram's
Gulab Jamun
Kurkure
Masala Munch
BINGO!
Mad Angles
Live Wires
# 157/2, Sri Kathiresan Street, Colombo 13.
Tel: 011 244 9598
Email: shannmugas51@gmail.com
"like" us on facebook



## ஸ்ரீ தம்பையா முதலியார் சத்திர
# சித்தி விநாயகர் கோயில்

கொழும்பு கொச்சிக்கடையில் அமைந்துள்ள மிகவும் பழைமை வாய்ந்த கோயிலும் இச்சத்திரமானதும் 1880ஆம் ஆண்டு தம்பையா முதலியாரால் இந்தியாவிலிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் கதிர்காமம் போக வரும் யாத்திரிகர்கள் தங்கி இளைப்பாறிச் செல்லுவதற்காகக் கட்டப்பட்டது. மேலும் இவ்வடியார்கள் வணங்கிச் செல்லவென ஒரு விநாயகர் சிலையையும் அன்று வேரோடியிருந்த வன்னி மரத்தின் கீழ் ஸ்தாபித்து வைத்தார். இன்று இக்கோயில் முன்னேற்றமடைந்து ஒரு பெயர் பெற்ற தலமாக உருவாகிய போதும் அடியார்கள் இன்றும் வன்னி மரத்தை வணங்கிச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதை உருவாக்கிய தம்பையா முதலியார் 1866 ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது மாநகர சபை உறுப்பினராகத் திகழ்ந்தார். இவர் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் ஸ்தாபகரான பொன்னம்பலம் முதலியாரின் உறவினருமாவார்.

சேர் பொன். இராமநாதன் நன்னித்தம்பி முதலியாரின் மாமனாராவார். தம்பையா முதலியாரின் மறைவிற்குப் பின்னர் 1932ஆம் ஆண்டு இச்சத்திரம் மகன் சண்முகம் முதலியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவரது மறைவிற்குப் பின்னர் 1944ஆம் ஆண்டு சகோதரரின் மகனான முருகேசு தம்பையாவிடம் கையளிக்கப்பட்டது.

இவரது மறைவிற்குப் பின்னர் 1946ஆம் ஆண்டு நீதிமன்றத்தால் சட்டப் பேராசிரியராக ரி.நடராஜா இதனது தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டார். இவரது தாயாரான சிவானந்தம் தம்பையா சேர்.பொன்னம்பலம் அருணாசலத்தின் நாலாவது புதல்வி ஆவார். இவரது வழிவந்த தற்போதைய தர்மகர்த்தாவாகிய பிரதாப்முருகேசர் எஸ்.நாகேந்திரா, எம்.ஜெகன், ரி.திலீபன் ஆகியோரின் முயற்சியால் 125 வருடங்களின் பின்பு தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு புனருத்தாரண கும்பாபிஷேகம் 16.09.2015 இல் நடைபெற்றது.

மேலும் இச்சத்திரத்தின் மகிமை யாதெனில் பெயர் பெற்ற சுவாமிகளான சுவாமி விவேகானந்தர், சுவாமி சிவானந்தர் கண்ணையா யோகி, சிவபால யோகி ஆகியோரும் தங்கி அருளாசி வழங்கி இளைப்பாறிச் சென்றமையாகும். "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

கால, சர்ப்பதோஷம் ராகு கேது கால நிவாரண பூஜைகள், திருமண தடை, செவ்வாய் தோஷம் ஆகியவற்றிற்கு, வன்னிமர நிழலில் இருக்கும் நாகபிரானுக்கு அபிஷேகங்கள் செய்து தங்கள் கையால் பாலாபிஷேகம் செய்து தோஷ நிவாரணத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

திருமணங்கள் திதி, அன்னதானம் வழங்கல், சைவ சமய வைபவங்கள் போன்றவற்றிற்கு மண்டபம் வாடகைக்கு கொடுக்கப்படும்.

# யோகா கற்றுக்கொள்ளுங்கள்

## ப்ராசாரித பாதோத்தாசனா



ஆரம்ப நிலை

- தடாசனாவில் நிற்கவும்.
- மூச்சை இழுத்து கைகளை இடுப்பில் வைத்து கால்களை 4 ½ அடி இடைவெளியில் பரப்பவும்.
- முழங்கால் மூடிகளை இறுக்கவும். மூச்சை வெளிவிட்டு, தோளுக்கு இணையாக பாதங்களுக்கு நடுவில், உள்ளங்கைகளைத் தரை மேல் வைக்கவும்.
- மூச்சை இழுத்து தலையைத் தூக்கவும்.
- மூச்சை வெளிவிட்டு தலையைத் தரையில் பதிக்க வேண்டும். உடல் பளு காலில் விழ வேண்டும், தலையில் அல்ல.



இறுதி நிலை

- இந்த நிலையில் அரை நிமிடம் இருக்க வேண்டும்.
- மூச்சை இழுத்து நாலாம் நிலைக்கு வரவும்.
- மூச்சை வெளிவிட்டு 2ம் நிலை வரவும்.
- குதித்து தடாசனாவுக்கு வரவும்.

**பலன்கள்:**

இடுப்பைச் சார்ந்த பகுதிகள் வலுவான பயிற்சி பெறுகின்றன. அதனால் இந்தப் பகுதியிலுள்ள தசைகள், நரம்புகளின் நெகிழ்தல் தன்மை அதிகரிக்கிறது. அதோடு இப்பகுதியிலுள்ள இறுக்கம் நீக்கப்படுகிறது.

தொடரும்


## தமிழர்கள் உணவு பரிமாறும் விதம்

1. உப்பு
2. இனிப்பு பலகாரம் அல்லது பாயாசம்
3. பச்சடி, கூட்டு, பொரியல், அவியல், வறுவல், ஊறுகாய் ஆகியவற்றை வலதிலிருந்து இடது பக்கமாக பரிமாறவேண்டும்.
4. அப்பளம், வடை போன்ற நொறுக்கு தீனி வகைகள்
5. சித்ரான்னம் (புளி சாதம், எலுமிச்சை சாதம் போன்றவை)
6. அன்னம்

### பரிமாறும் விதம்

அன்னத்தில் முதலில் பருப்பு, நெய் பரிமாறவும்.
அடுத்து குழம்பும், அடுத்து ரசமும், இறுதியில் தயிர் அல்லது மோர், ஊற்றிகொள்ளவேண்டுமாம்.






**ROYAL HOSPITAL (PVT) LTD**

*Care...when and where you need it most*

- அதி நவீன மருத்துவ வசதிகளுடன் தேர்ச்சி பெற்ற மருத்துவ நிபுணர்களின் சேவையைப் பெற உங்கள் அருகாமையில் உள்ள வைத்தியசாலை.
- உயரிய தரத்தில் சிநேகபூர்வமான பராமரிப்புச் சேவைகளுடன் நவீன வசதிகளைக் கொண்ட நோயாளர் அறைகள், உயர் தரத்திலான ஆய்வுகூட மற்றும் பாமசி வசதிகள்.
- எளிதில் எவரும் வந்து சேரக்கூடிய தூரத்தில் அமையப்பெற்றுள்ள ரோயல் ஹொஸ்பிடல் ஏராளமான வாகனங்களை நிறுத்தக்கூடிய வசதிகளையும் கொண்டுள்ளது.

62, W.A. Silva Mawatha, Wellawatte, Colombo 06.
Tel : 2586581, 2584212, 2597565, 2559268
E-mail: manager@royalhospitals.com | Fax: 2597698

# வளமான வாழ்விற்கு ஃபெங் ஷுய்

## ஃபெங் ஷுயைக் கொண்டு நவீனமாக வாழும் வழிமுறைகள்


### படுக்கை அறை

∴பெங் ஷுயின்படி படுக்கை அறை ஒரு வீட்டில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். காரணம் இங்குதான் உங்கள் வாழ்வின் மூன்றிலொரு பகுதியை நீங்கள் கழிக்கின்றீர்கள். நாள் முழுவதும் உழைத்து நீங்கள் இழந்துவிட்ட சக்தியை திரும்பப் பெறும் இடமும் இதுதான். உங்கள் ஓய்வுக்குத் தேவையான எல்லாம் அதில் இருக்கின்றதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். படுக்கை அறை பற்றிய சில முக்கியக் குறிப்புகள்:-

1.படுக்கை அறையில் தண்ணீரையோ அல்லது தண்ணீர் தொடர்புடைய பொருட்களையோ வைக்காதீர்கள். அப்படியிருந்தால் அது திருட்டுக்கும், பொருள் நஷ்டத்திற்கும் வழிவகுக்கும்.

2.படுக்கை அறையில் செடிகொடிகளை வைக்காதீர்கள். செடிகள் 'யங்' சக்தியின் அடையாளங்களாகும். அவை கணவன் மனைவிக்கிடையே மோதலை உண்டாக்கும். 'யங்' சக்தி ஆழ்ந்த நித்திரையைக் கெடுக்கும்.


3.தூங்கும்பொழுது படுக்கையைப் பார்க்க கண்ணாடி இருக்கக்கூடாது. படுக்கை அறையிலுள்ள கண்ணாடி 'யங்' 'சி'யை உருவாக்கி உங்கள் உறக்கத்தைக் கெடுக்கும். உங்கள் சக்தியை அழிக்கும். கண்ணாடியில் பிரதிபலிக்கும் பிம்பம் உங்கள் உறவையும் ஆரோக்கியத்தையும் பாதிக்கும்.




படுக்கையைப் பார்த்திருக்கும் கண்ணாடி

4.உத்தரத்திற்கு (Beam) கீழே படுக்காதீர்கள். உத்தரத்திலிருந்து வெளிப்படும் சக்தி, அதன் கீழே படுத்திருப்பவரின் நல்லதிர்ஷ்டத்தை மிகவும் மோசமாக பாதிக்கும்.

5.படுக்கை அறையிலுள்ள இரட்டைப் படுக்கை (Double Bed) கட்டிலில், கட்டில் முழுவதும் ஒரு பெரிய மெத்தையே போடப்பட்டிருக்க வேண்டும். இரண்டு சிறிய தனித்தனி மெத்தைகளில் ஒருபோதும் தூங்கக்கூடாது. இது பிரிவின் அடையாளமாகும். அதனால் தம்பதியினரிடையே கருத்து வேற்றுமை உண்டாகும்.



இது தவறு இது சரி

தொடரும்






# மன அடக்கம்

இதற்கு அப்பியாசமும் (பயிற்சியும்), வைராக்கியமும் (உலகப் பற்றின்மையும்) தேவை.

வடக்கு நோக்கிச் சென்றால் தெற்கு தானாகவே விலகிவிடும். நல்லதை நாடிச் சென்றால் தீமை தானாகவே மறைந்துவிடும். ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சீடர் சுவாமி பிரம்மானந்தர் பின்வருமாறு கூறினார்.

“உன் உள்ளத்தில் ஏதேனும் தீய எண்ணம் எழுந்தால், ‘இந்த எண்ணம் எனக்குப் பரம எதிரி: எனக்கு முற்றிலும் தீமை விளைவிக்கக் கூடியது: இது என்னை அடியோடு அழித்துவிடும்’ என்று சிந்திக்க வேண்டும். அடிக்கடி இப்படிச் சிந்தித்து, மனதில் நன்றாகப் பதியும்படிச் செய்ய வேண்டும். அப்போது அந்த எண்ணம் தானாகவே உன் மனதிலிருந்து விலகிப் போய்விடும்.

“உதாரணத்திற்கு இதோ இந்தப் பையன் இங்கே உட்கார்ந்திருக்கிறான். ‘இவன் யாரோ, நமக்கும் இவனுக்கும் தொடர்பில்லை’ என்று இவனைப் பற்றிச் சிந்தனை செய்ய வேண்டும். அப்போது இந்தப் பையனைப் பற்றிய எண்ணமே உன் மனதில் பதியாது.

“இன்னும் ஓர் உதாரணம் - ஒரு சின்னக் குழந்தை இருக்கிறது. 'விஷம் என்றால் என்ன, அதைச் சாப்பிட்டால் என்ன ஆகும்?' என்று அந்தக் குழந்தைக்குத் தெரியாது. அதன் அருகில் கொஞ்சம் விஷம் இருந்தால், அதைப் பார்த்து அந்தக் குழந்தை பயப்படாது. ஆனால் கொஞ்சம் விஷம் உன் அருகில் இருந்தால் போதும். 'ஐயோ!' என்று அலறியபடியே துள்ளி எழுந்து பத்தடி நகர்ந்து விடுவாய். விஷம் சாப்பிட்டால் மரணம் நிச்சயம் என்று உனக்குத் தெரியும் அல்லவா? அதனால்தான் அப்படி ஓடுகிறாய். மனம் ஓர் ஆச்சரியமான பொருள். நீ என்ன கற்பிக்கிறாயோ, அதைக் கற்றுக்கொள்ளும்.

“மனதில் எழும் ஆசைகளும் காம எழுச்சிகளும் உண்மையானவையல்ல’ என்று தியானம் செய்யும்போது நினைக்க வேண்டும். இது நாளடைவில் மனதில் ஆழ்ந்து பதியும். மனதிலிருந்து தீய எண்ணங்கள் நீங்கும்போது நல்லெண்ணங்கள் விரைந்து வரும்.”



## கணபதியை கடலில் கரைப்பதற்கான காரணம்

ஒரு சமயம், பார்வதிதேவி கங்கையில் நீராடியபோது தன் அழுக்கைத் திரட்டி பொம்மையாக்க, அது யானைத் தலையும், மனித உருவும் கொண்டிருந்தது. அதை அன்னை கங்கையில் எறிய, பேருருக் கொண்டு விநாயகனாக வெளிவந்தார். அவரை பார்வதியும், கங்கையும் பிள்ளையாக ஏந்திக் கொண்டனர். விநாயகருக்கு, பார்வதி, கங்கை இருவரும் அன்னையரே.

இதனால்தான் சதுர்த்தி முடிந்ததும் பிள்ளையாரை கங்கையில் கரைக்கும் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் கங்கையும் சேரும் இடம் என்பதால் கடலில் கரைக்கும் பழக்கம் உண்டானது. பத்மபுராணத்தில் உள்ள கதை இது.


Sri Suriyas
Jewellers
57, Sea Street, Colombo 11. Tel: 011 2447358
Email: krishna.suriyas@gmail.com
www.srisuriyasjewellers.com


Sunco Fancy
Stationary Items, Professional in Cosmetic Items, Costume Jewellery, Threading Items, lace items and saloon Accessories.
NO : 456 A, Galle Road, Wellawatta, Colombo 06.
Tel 0114 - 892 466, 0775 - 524 884


Rishi Foods
Pure Vegetarian
We Undertaken Catering Orders for Birthday Party and Special Occasions
#285, Galle Road, Wellawatte, Colombo 6.
# 459 A, Galle Road, Wellawatte, Colombo 6.
Hot Lines :07774125335, 0777508049, 0117209017


அனைத்து விளம்பரங்களும்
ஏற்றுக்கொள்ளப்படும்
Daily News
வீரகேசரி
ලංකාදීප
தினகரன்
Sunday Observer
Hit Ad
classified
flex
Advertising
Dial: 0777-555026
4, IBC Road, Wellawatte.
www. flexgraphic.lk


World's No.1 Rated CCTV Brand
HIKVISION
Ex - Stockes
Dealers Welcome
HIKVISION LANKA (PVT) LTD
Sole Agent and Direct Manufacturer Support Center for Sri Lanka.
www.hikvision.lk
fb/HikvisionSriLanka
# 14, Dharmarama Road, Colombo 06.
Mob - 0777 111 999 | Call Center -0114 400 400


GTV ENTERPRISES (PVT) LTD.
வெளிநாடுகளுக்கு
விரைவாக பொதிகள்
அனுப்பும் சேவைக்கு...
இன்றே நாடுங்கள்!
18/3, Dr. E. A. Cooray Mawatha, Colombo 06.
Tel: 011 465 4444 / 011 236 0926

# நவ பைரவர்கள்

















**1.கால பைரவர்:** சேஸ்திரபாலர், வடுக பைரவர் சிவன் கோயில்களில் காவல் தெய்வம், எம பயம் விலக, திருடுபோன பொருட்கள் மற்றும் காணாமற் போனவர்களை கண்டு பிடித்து அருள்பவர்.

**2.சண்ட பைரவர்:** சுபகாரியம் தொடங்குவதற்கு முன்பாகவும், காரியத்தடை விலகவும், மாந்திரீகப் பிரச்சனைக்கும், மாரண சித்தி பெற, பேய்விரட்ட உதவுபவர்.

**3.குரோத பைரவர்:-** வித்வேசன சித்தி பெற அருள்பவர்.

**4.உன்மத்த பைரவர்:-** அபிச்சார பிரயோகம், (எதிரியை எதுவேண்டுமானாலும் செய்யலாம்) பூர்வ ஜென்ம தோஷம் நீங்க உபாசனை செய்யலாம். அஷ்டமாசித்திகளில் மோகனம், மாரணம் சித்திகளுக்கு அருள்பவர்.

**5.கபால பைரவர்:-** மாந்த்ரீக பிரச்சனைகளுக்கும், சர்வமும் வசியம் ஆகவும் அருள் செய்பவர்.

**6.அசிதாங்க பைரவர்:-** (கபால பிஷ்ண பைரவர்) கிரகக்கோளாறுகள் நீங்கவும், ஆகர்ஷ்ண சக்தி பெறலாம்.

**7.யோக பைரவர்:-** வாக்கு சித்தி, உபாசனை சக்தி பெறுகவும், உச்சாடன சித்தி மற்றும் சக்தி பெற அருள் தருவார்.

**8.சம்ஹார பைரவர்:-** அஷ்டமா சித்திகளுக்கும், மோட்சத்திற்கும் அருள்வார்.

**9.ஸ்வர்ணகர்சன பைரவர்:-** இவரை இல்லங் களிலும் வர்த்தக நிறுவனங்களிலும் வடகிழக்கு மூலையில் வைத்து வழிபட்டால் பொருளாதார வளர்ச்சி உயரும்.



**பைரவர் வழிபாடு:-** செவ்வரளி மாலை, மிளகுவடை மாலை, முந்திரிப் பருப்பு மாலை, திராட்சை மாலை, வெற்றிலை மாலை, எலுமிச்சம்பழ மாலை, சிறு தேங்காய் மாலை, வெட்டி வேர் மாலை உபயோகிக்கவும்.

**நைவேத்தியம்:-** வெள்ளை அப்பம், வில்வப் பழம், வெண்தாமரை, எள்சாதம்.

**தீபம்:** நெய் தீபம்.

**எதிரியை வீழ்த்த** எதிரியை வீழ்த்த, வாய்கட்டு, வாய் ஜாலம், கட்டப் பஞ்சாயத்து தீர்வுக்கு, சித்தர் மந்திரம். **'சங் வங் மங் சரவணா வா வா'** 1008 முறை

**வாசலில் வெற்றிலை தோரணம்**


சுப நாட்களில் வாசற்காலில் தென்னங்குருத்துப் பின்னியும், மாவிலைகளுடன் தோரணம் கட்டுவார்கள். அத்துடன் வெற்றிலையையும் கட்டித் தொங்க விடலாம். வெற்றிலை தீய சக்திகளை விரட்டிவிடும் ஆற்றல் கொண்டது.

# வாழ்க்கையில் வெற்றி

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பெறும் வெற்றி, தான் பெற்ற அறிவினால் மட்டுமன்றி எல்லையற்ற தன்னம்பிக்கையும் கொண்டதால் தான் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. தன்னம்பிக்கையானது மனதை வளப்படுத்திக் கொண்டால் மட்டுமே சாத்தியமாகும்.

ஒருவர் தான் எடுத்துக் கொண்ட செயலை எத்தனை தடைகள் வந்தாலும் விடாமுயற்சியோடு, எதிர்த்து போராடி வெற்றி பெற முடியும் என்ற தன்னம்பிக்கை மன வளத்தினால் ஏற்படும் சக்தியே.

வாழ்க்கையில் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் போது நமக்கு ஏற்படும் தோல்விகள் மனக்கசப்புகள், ஏமாற்றங்கள், துன்பங்கள் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை உருவாக்கி கொள்ளல் வேண்டும். அவ்வகையில் உருவாகும் மனப்பக்குவம் நமது வாழ்க்கை பாதையை சீரமைப் பதற்கும் மிகவும் உதவியாய் இருக்கும்.




ஒரு முறை எதிர்கொண்ட தோல்வியை கண்டு துவண்டு விடாமல், விடாமுயற்சியை ஆயுதமாகக் கொண்டு முன்னேறி சென்றால் நாம் பெற்ற தோல்விகள் படிக்கட்டுக்களாக மாறி தமக்கு வெற்றிக்கனியை ஈட்டி தரும். அவ்வாறு வெற்றியடையும் வரை நாம் செல்லும் நேர்மையான வழியில் எதிர்ப்படும் பிரச்சனைகளை சமாளிக்கும் மனப்பக்குவம், பொறுமை ஆகியவற்றை நமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

# பெண்மையைப் போற்றுவோம்!



- பெண்களும் ஆண்களும் கூடிய ஒரு கூட்டுச் சமுதாயமே உலகு.
- பெண் இன்றி ஆண் இல்லை. ஆண் இன்றிப் பெண் இல்லை.
- உலகில் உள்ள மக்கள் அனைவரும் பெண் இனத்தின் அன்பளிப்பே.
- பெண்கள் இயற்கையிலேயே தியாகிகள். பிறந்து வளர்ந்து வீட்டை சுற்றத்தை விட்டுக் கணவனின் கைப் பிடித்து மற்றவர்களைக் காப்பாற்றவே வருகிறாள்.
- பெண்ணாகிய தாய் ஊட்டும் தன்னம்பிக்கையே மனிதனை உலகறியச் செய்யும்.
- தன்னலமின்றி பிறர் நலம் கருதும் தாய்மை உள்ளமே பெண்மை.
- ஏற்றம் பெற்ற எல்லா நாடுகளும் பெண்மையைப் போற்றுவதாக உள்ளன.
- ஐயமின்றி, இறைவன் உயிரினத்தின் படைப்பை பெண்மையிடமே ஒப்படைத்துள்ளான்.
- குடும்பச் சக்கரம் நல்ல விதமாய்ச் சுழல அச்சாணியாய் இருக்கிறாள் பெண்.
- பற்றற்ற துறவியே பெண், கடமை அறம் மாறாதவள் பெண்.
- பெற்றவளாய், மகளாய், சகோதரியாய், ஆணுக்கு உற்றவளாய் இருப்பவள் பெண்.
- கணவனின் நலமே கண் எனக்கொள்பவள் பெண்.
- பலன் கருதாது குடும்பத் தொண்டாற்றுபவளே பெண்.
- பெண்களின் முன்னேற்றமே குழந்தையின் முன்னேற்றம். குழந்தையின் முன்னேற்றம் தான் குடும்பத்தின் முன்னேற்றம். குடும்பத்தின் முன்னேற்றம் தான் நாட்டின் முன்னேற்றம்.
- பெண் துணையால் வாழும் பெருமை மிகு மனித இனமே! பெண்ணிடம் பெருமதிப்புக் கொள்.
- மனைவி தான் ஒரு ஆணின் உண்மையான சிநேகிதி.



POTHYS
Specialist in • Wedding Sarees • Shalwar Kameez • Children Wears • Readymades
177A, Galle Road, Wellawatte, Colombo 6. | Tel: 0112 559 716



# JAYA GANDHI LODGE

*(Pure Vegetarian Restaurant)*

Catering order will be undertaken for any occasion









# GANDHI TOURS




Gandhi Building, No. 200, Galle Road, Colombo-06.
Tel : 2 582729, 2 360072, 2 503598, 0777 872156
E-mail: gandhitourslk@gmail.com | Web : www.gandhilodge.com

# ஷீர்டி சாய்பாபா

- திருமதி.பாண்டிசாந்தி
இந்தியா

நிலையான துணை மனித ஆத்மாக்கள் தங்கள் கர்மவினைகளிலிருந்தும், பல பிறவிகளிலிருந்தும் விடுபடுவதற்காக, அவர்களை தம் பக்கம் இழுத்து, உதவி செய்து பண்படுத்தி, ஆன்மீக வழியில் முன்னேற்றம் அடையச் செய்வதே பரம சத்குருவான ஸ்ரீ சாயி நாதரின் முக்கியப் பணியாகும். 'ஸ்ரீ சாயி சத்ச்சரித்ரா' புத்தகத்தில் பாபா அவர் முன்பிறவியைப் பற்றி பல கதைகள் கூறியிருக்கிறார். அவர் பரமாத்வாக இருப்பதால், எல்லா ஜீவாத்மாக்களின் முற்பிறவிகள் பற்றியும் அறிந்திருக்கிறார்.

“ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் என் பக்தர்கள் எவரேனும் ஒருவர் இறப்பை சந்திக்க நேரிடும்போது, அந்த ஆத்மாவை என்னிடம் இழுத்துக் கொள்ள முடியும். எல்லோரையும் பற்றி, எல்லாவற்றையும் நான் அறிந்திருக்கிறேன்”. ஓர் உண்மையான பக்தனுக்கு, இப்படிப்பட்ட ஒரு சமர்த்த சத்குருவை பற்றிக்கொள்வதே அடிப்படையான மற்றும் இறுதியான தேவையாகும்.

ஆனால், சத்குரு ஒருவர் மட்டும்தான் இறப்பிற்குப் பிறகும் நம்முடனேயே வருகிறார். ஆகவே, அவரே நமது சிறந்த, நிலையான துணையாவார். நாம் கொண்டிருக்கும் ஆழ்ந்த அன்பு பக்தி, நம்பிக்கை இவற்றை முழுமையாக அவர்பால் செலுத்தி அவரையே நாம் இறுகப் பற்றிக்கொள்வோம்.

இவ்வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் சுக துக்கங்கள் யாவும் அவருடைய கட்டுப்பாட்டிற்கும் வழிகாட்டுதலுக்கும் உட்பட்டே நடக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும். இத்தகைய அனுபவங்கள் ஆத்மாவை உய்விக்கத்தான் என்பதால் அவை தேவையானவை என்றும் நாம் உணர வேண்டும். இத்தகைய தீவிர நம்பிக்கையும், பொறுமையும், உடையவர்கள், இவற்றை சீக்கிரமே இழந்து விடும் மற்றவர்களை காட்டிலும், விரைவாக முன்னேற்றம் காண்பார்கள், என பாபா உறுதியளிக்கிறார். “ஒரு கஷ்டமான நிலைமையை சந்திக்கும் போது மனம் உடைந்து போக வேண்டாம். பொறுமையுடன் என்ன நடக்கிறது என்பதை கவனித்த வண்ணம் இருங்கள். ஏனெனில் என்னுடைய குழந்தை களையும், பக்தர்களையும், எப்படியாவது காப்பாற்றுவதே என்னுடைய கடமையாகும்.” இதைவிட சிறந்த உறுதி மொழியை வேறு எவரால் நமக்கு கொடுக்க முடியும்?

சுகமோ துக்கமோ பாபாவும் நம்மோடு சேர்ந்து அதை அனுபவிக்கிறார். நாம் அழும்போது அவரும் அழுகிறார். நாம் சிரிக்கும்போது அவரும் சிரிக்கிறார். நமது ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அவரது பங்களிப்பு இருக்கிறது… அதை அவர்தானே உறுதியாகக் கூறியிருக்கிறார். அவர் மீது எல்லாவற்றுக்கும் நம்பிக்கை வையுங்கள், பாபா உங்களை காப்பார். என்னையே சார்ந்திரு. ஏங்குதல், போராட்டங்களை விடுத்து என்னையே சார்ந்திரு, நான் உன்னுடனையே இருப்பேன். நான் உன்னுடைய தாகத்தை தீர்ப்பதற்காக வருவதற்குள் உன் மனம் சஞ்சலமடைந்து, எங்கேயோ போகிறாய். நான் உனக்காகவே இருக்கிறேன். பாரத்தை என்மேல் சுமத்து சாந்தி ஏற்படும்.

சாயியின் முகம் புனிதமானது. சில கணங்களுக்கு நாம் நமது பார்வையை அவர்பால் செலுத்தினாலும் நமது முந்தைய பல பிறவிகளின் துக்கங்களை அழித்து நம் மீது பேரானந்தத்தை அவர் பொழிகிறார். கருணையுடன் அவர் நம்மீது நோக்குவாராயின் நமது முன்னைய கருமவினைக் கட்டுக்களெல்லாம் அறுபட்டு நாம் மகிழ்ச்சிக்கு வழிகாட்டப்படுகிறோம்.





### சகல செல்வங்களும் தரும்

# ஸ்ரீ மகாலக்ஷ்மி

## எப்போதும் நற்குணங்களால் விளங்குபவனிடம் நான் வாசம் செய்கிறேன்

தெய்வ நம்பிக்கை கொண்டிருத்தல், உண்மையே பேசுதல், எவருக்கும் தீங்கு செய்யாமலிருத்தல், எல்லோரிடமும் அன்பாகப் பேசுதல், மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டிருத்தல் நற்செயல்களில் ஆர்வம் காட்டுதல், நன்றி மறவாமல் இருத்தல், நேர்மையுடன் இருத்தல், பொறுமை காத்தல், கோபம் கொள்ளாதிருத்தல், தன்மானம் படைத்திருத்தல், எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றலும் துணிவும் படைத்திருத்தல், பெரியோர்களை மதித்துப் போற்றுதல் ஆகிய குணங்களை நற்குணங்களுக்கு சான்றாகக் கூறலாம்!

எப்போதும் நற்குணங்களால் விளங்குபவனிடத்தில் நான் நீடித்து வாசம் செய்கிறேன் என்று மகாலட்சுமி கூறியிருக்கிறாள்...!

பச்சோந்தி என்னும் பிராணி தான் இருக்கும் இடத்திற்கு தகுந்தாற்போல் நிறத்தினை மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டது...!

அந்தப் பச்சோந்தியைப் போன்றவர்கள் இந்த வையத்திலும் உண்டு...!

நேருக்கு நேராக நற்குணங்களைக் கொண்டவனைப் போல் காட்டிக் கொண்டு மறைவாக வஞ்சகத்தை வெளிக்காட்டுகிறவர்கள் அந்த ரகத்தைச் சார்ந்தவர்களாவர்!

ஊர் ஜனங்கள் முன்பு நேர்மையாளர் போல் காட்டிக் கொண்டு திரை மறைவில் ஜனங்களுக்கு பாதகமான செயல்களைச் செய்கின்றவர்களும் அதே ரகத்தைச் சார்ந்தவர்களே...!

உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என்று வள்ளலார் பாடுகிறார்... அவ்வாறு உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவோரும் பச்சோந்தி கூட்டத்தைச் சார்ந்தவர்களே ஆவார்...!

இதனையெல்லாம் கருத்தில் கொண்டே எப்போதும் நற்குணங்களால் விளங்குபவன் எவனோ அவனிடத்தில் நான் நீடித்து வாசம் செய்கிறேன் என்று மகாலட்சுமி கூறுகிறாள்...!

மற்றவர்கள் தன்னை இகழ்ந்தாலும் சரி... புகழ்ந்தாலும் சரி. இம்மியளவு கூட நேர் வழியில் மாறாமல் எவன் இருக்கிறானோ அவனே நற்குணங்கள் நிறைந்தவன் என்று அழைக்கப் பெறுவான்...!

ஏழை... பணக்காரன் என்கிற வேறுபாடு பார்க்காமல் தீர்ப்பு செய்பவன் எவனோ அவனே நற்குணங்கள் நிறையப் பெற்றவன்...!

செல்வத்தில் திளைக்கிற போதும், வறுமையில் வாடுகின்றபோதும், ஒரேவிதமான மனநிலையினை எவன் கொண்டிருக்கிறானோ அவனே நற்குணங்கள் நிறையப் பெற்றவன்...!

எப்போதும் நற்குணங்களால் விளங்குபவன் என்பதற்கு இதுவே பொருளாகும்!

தசரதச் சக்கரவர்த்தி தன் மூத்த மகன் ஸ்ரீராமனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று தீர்மானம் செய்கிறான். அந்தச் செய்தி ஸ்ரீராமனுக்கு தெரிவிக்கப்படுகிறது! அப்போது புன்முறுவலுடன் கூடிய முகத்துடன் அதனை அவன் கேட்டான்!

அதற்கிடையில் கூனியின் கலகத்தால் கைகேயி மனம் மாறுகிறாள்...!

தனக்கு தசரதன் கொடுத்த வரத்தை நினைவுபடுத்தி பரதன் நாடாளவும், ராமன் பதினான்கு ஆண்டுகள் கானகத்தில் வாழ்ந்து மீளவும் அவள் வரம் கேட்கிறாள். கைகேயியே நேரடியாக வந்து ஸ்ரீராமனிடம் இதனை தெரிவிக்கிறாள்...!

பட்டாபிஷேகம் என்று கூறியபோது ஸ்ரீராமனின் முகம் எப்படி மலர்ந்திருந்ததோ அதேபோல் கானகம் செல் என்று சொன்னபோதும் அவன் முகம் பொலிவு சிறிதும் மாறவில்லை...!

நாடு... காடு ஆகிய இரண்டையும் சமமாக பாவித்தான் ஸ்ரீராமன்...!

செல்வத்தில் திளைக்கின்ற போது தருமத்தைப் பற்றி சிலர் நிறைய பேசுவார்கள்...! தருமத்தின் வழியிலும் நடப்பார்கள்...!ஆனால் வறுமையின் பிடியில் சிக்கிக் கொண்டால் அவர்கள் நிலைமை தலைகீழாக மாறிவிடும்!

தருமத்தைக் காற்றில் பறக்க விட்டு விட்டு அதர்ம வழியிலும், சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடத் தொடங்கிவிடுவார்கள்...!

இத்தகையவர்களை நற்குணவான் என்று கூறக்கூடாது...!

பலவீனம் நிறைந்த சந்தர்ப்பவாதிகள் என்றே கூற வேண்டும்...!

தருமத்தில் விடாப்பிடியாக எவன் இருக்கின் றானோ... அவனே உறுதி வாய்ந்தவன்...!

பாண்டவர்கள் கானகத்தில் வசித்தபோது தரும புத்திரனுக்கு கடுமையான தாகம் ஏற்பட்டது!

அவன் சகாதேவனை அழைத்து தம்பீ... எனக்கு மிகவும் தாகமாக இருக்கிறது... எங்கேயாவது நீர் நிலை தென்பட்டால் அங்கு சென்று நீர் கொண்டு வா... என்றான்...!

சகாதேவன் அங்கும் இங்கும் சுற்றி நீர்நிலை ஒன்றினைக் கண்டான்...!

அவனுக்குத் தாகமாக இருந்ததால் முதலில் நீர் அருந்திவிட்டு பிறகு அண்ணனுக்கு எடுத்துச் செல்லலாம் என்று நினைத்தான்...!

அவன் நீரை அள்ளியதும் அங்கிருந்து ஒரு அசரீரி குரல் கேட்டது...!

இது என் வசத்தில் உள்ள குளம். முதலில் என் கேள்விகளுக்கு பதில் கூறிவிட்டு பிறகு குடி என்று அது கூறியது...!

அக்குரலை அலட்சியம் செய்து சகாதேவன் நீரைப் பருகுகிறான்...!

மயங்கிவிழுந்து இறந்து போனான்...!

நெடுநேரம் ஆகியும் சகாதேவன் வராததால் தரும புத்திரன் நகுலனை அனுப்பி வைத்தான்...!

நகுலனும் அக்குளத்திற்கு வந்து அசரீரியின் குரலை அலட்சியம் செய்து நீர் அருந்தி மாண்டு விழுந்தான்...!

அதன் பிறகு அருச்சுனன்... பீமன் ஆகியோர் வந்து அதே நிலையினை அடைந்தனர்...!

நான்கு தம்பிகளும் திரும்பி வராததைக் கண்ட தருமபுத்திரன் மிகவும் வருந்தி அக்குளத்தினை அடைந்தான்...!

அங்கே நால்வரும் இறந்து கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவன் முதலில் தாகத்தை தணிக்க நினைத்து நீரை அள்ளினான்...!

மீண்டும் அசரீரி ஒலித்தது...!

உன் தம்பிகள் நால்வரும் நான் சொன்னதைக் கேட்காமல் நீரைப் பருகி மாண்டார்கள்...!

முதலில் என் கேள்விகளுக்குப் பதில் கூறிய பிறகு நீரைக் குடிக்கலாம் என்று அது கூறியது...!

சரி... உன் கேள்விகளைக் கேள் என்று தரும புத்திரன் கூறினான்...!

அசரீரி கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பொருத்தமான பதில்களை அவன் கூறினான்..!

அதனைக் கேட்டு மகிழ்ந்த அசரீரி உன் தம்பிகளில் ஒருவனை உயிர்ப்பிக்க முடியும்...!

யாரை எழுப்ப வேண்டும்? பெயர் கூறி அழைப்பாயாக என்று அது கூறியது...!

நகுலன் எழட்டும் என்று தரும புத்திரன் கூறினான்!

அதைக்கேட்ட அசரீரி மிகவும் வியப்படைந்து நடக்கப் போகும் யுத்தத்தில் வெற்றிக்கு காரணமாக இருக்கப் போகும் பீமனும் அருச்சுனனும்தான்...!

அப்படியிருக்க அவர்களை நீக்கிவிட்டு நகுலனை ஏன் எழுப்புகிறாய்...? என்று அது கேட்டது...!

தருமபுத்திரன் அதற்கு பதில் சொல்கிறான்...

ஆன்மீக வினாவிற்கான விடையை கூறி பரிசு பெறுங்கள்!
CD WORLD MUSIC CENTRE
முன்னணி பாடகர்கள் பாடிய
பக்திப்பாடல்கள்
இங்கு கிடைக்கும்
No. 298, Galle Road, Wellawatte.
செல்வத்தின் அதிபதி யார்?
▸ வைரவர்
▸ குபேரன்
▸ பிரம்மா
Call Now & Win
பக்தி பாடல்கள் Audio CD
Flex Publications
0778 335 552
Call Monday - Friday
From 9am - 5pm.
(1st May-16th May)

வெற்றிக்கு அடிப்படை பீமனோ... அருஜ்ஜுனனோ இல்லை!

தருமம்தான் வெற்றியை நிர்ணயிருக்கிறது...!

என் தந்தை பாண்டு மகாராஜாவுக்கு இரு மனைவியர்..!

குந்தி தேவியின் நினைவாக நான் மிஞ்சினேன்!

என் சிற்றன்னை மாத்ரி தேவியின் நினைவாக ஒருவன் இருக்க வேண்டும். இதுவே தருமம்... ஆகையால் நகுலன் எழட்டும் என்று அவன் கூறினான்....!

அதனைக் கேட்ட அசரீரி வடிவில் இருந்த தரும தேவதை மனம் மகிழ்ந்து தருமபுத்திரா... நேர்மையும், வெள்ளை உள்ளமும் கொண்டவன் நீ! உன்னுடைளய எல்லா தம்பிகளும் உயிர் பெற்று எழுவார்கள் என்று கூறியது...!

அதே போல் இறந்து போன நால்வரும் உயிர் பெற்று எழுந்தார்கள்...!

நான்கு தம்பிகளும் இறந்து கிடைந்தார்கள்.. அப்போதும் பொறுமையைக் கடைப்பிடித்து அசரீரி கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் அவன் பதில் கூறினான்...!

தன் உடன் பிறந்த தம்பிகளான பீமனையோ... அருச்சுனனையோ உயிர்ப்பிக்காமல் தருமத்திற்கு முக்கியம் கொடுத்து நகுலனை அவன் எழுப்பினான்!

நற்குணத்திற்கு எடுத்துக்காட்டாக இதைவிட வேறு எதுவும் இருக்க முடியாது...!

நற்குணங்களின் மொத்த வடிவமாகத் திகழ்ந்தவன் தரும புத்திரன்..!

இந்த ஒரு நிகழ்ச்சியினை மனதில் நிலை நிறுத்தினாலே நற்குணம் நிறைந்தவனின் இலக்கணத்தை நாம் அறிந்து கொள்ள முடியும்..!

"சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி... கிளியே.. செம்மை மறந்தாரடி" என்று அமரகவி பாடியது போல் இரக்க உணர்ச்சியினை இழந்து விட்ட மனிதர்களை நாம் கண் கூடாகக் கண்டு வருகிறோம்...!

சிற்றன்னையின் மகனை தன் சொந்த சகோதரனுக்கும் மேலாக நினைத்த தரும புத்திரனின் நற்குணத்தில் லட்சத்தில் ஒரு பங்கு இருந்தாலே நாம் மிகச் சிறந்த நற்குணவான் களாகத் திகழ முடியும்..!

ஆகவே, நற்குணங்கள் என்பது பச்சோந்தியைப் போல் நிறம் மாறக்கூடியதாக இருக்க கூடாது!

வைரம் பாய்ந்த நெஞ்சத்துடன் எதுவரினும் வருக... ஒருபோதும் நேர் வழியிலிருந்து விலக மாட்டேன் என்று சொல்பவனே எப்போதும் நற்குணங்களால் விளங்குபவனாகத் திகழ முடியும்..!

அத்தகையவனிடமே மகாலட்சுமி நீடித்து வாசம் செய்வாள் என்பது நாம் அறிய வேண்டிய கருத்தாகும்!

ஆகவே, நீங்கள் நற்குணங்கள் நிறையப் பெற்றவர்களாக இருந்தால் செல்வம் கொழிக்கச் செய்யக்கூடிய எல்லா சூழல்களும் மகா லட்சுமியின் கருணையால் உங்களுக்கு உண்டாகும்!

நற்குணங்கள்தான் ஒருவனை நிலையான ஐஸ்வர்யவானாக மாற்ற முடியும்..!

நற்குணங்கள்தான் மகாலட்சுமிக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியும்..!

நற்குணங்கள்தான் நீங்கள் விரும்புகின்ற பெரும் செல்வத்தை உங்களுக்கு வாரி வழங்க முடியும்....!

தொடரும்




# அருள் மொழிகள்


திறந்த உள்ளத்துடன், அறநெறிகளைப் பின்பற்றி வாழ்பவன் பேரின்ப வாழ்வை அடைவது உறுதி.

செய்யும் நற்செயலும், தீய செயலும் நிழல் போல என்றென்றும் தொடர்ந்து கொண்டிருக்கும். இதிலிருந்து யாரும் தப்ப முடியாது.

செல்வமும், பதவியும் யாரையும் அடிமையாக்குவதில்லை. அதில் கொள்ளும் பற்றே மனிதனை அடிமையாக்கி விடுகிறது.

*- புத்தர்*





தம்மை அடைவதற்கு என்னென்ன வேண்டுமோ அவற்றையெல்லாம் உண்மையான பக்தனுக்கு இறைவனே ஏற்பாடுசெய்து தந்துவிடுவார்.


தன்னுள் தன்னை கண்டுவிட்டால் எல்லாம் ஆகிவிட்டது அதற்காகத்தான் சாதனை.

*- ராமகிருஷ்ண பரமஹம்ஸர்*

நான் அனுபவிக்கும் இந்த துன்பத்திற்கு நானேதான் காரணம். ஆகவே இதற்கு நானேதான் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். ஆகவே எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள் உங்கள் விதிக்கு நீங்களே தான் காரணம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் எதிர்காலத்தை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள்.

*-சுவாமி விவேகானந்தர்*





உடம்பினால் நல்ல காரியம் செய்ய வேண்டும். கோயிலுக்குப் போய் பிரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்ய வேண்டும். தண்டம் சமர்ப்பித்தல் என்று நமஸ்காரத்தைச் சொல்லுவார்கள். (தண்டம் என்றால் தடி) தடியைப்போல் விழுவதுதான் அது. இந்த உடம்பு நமதன்று, அவருடையது என்று நினைத்து அவர் சன்னிதியில் போட்டு விட வேண்டும்.

*- காஞ்சி பெரியவர்*

இறைவன் உருவம், நாமம், குணம்குறி யாவும் இல்லாத பரம்பொருள், ஆனால் அப்பரமபதி உயிர்களை உய்விக்கும் பொருட்டு அருளுருத் தாங்குகின்றான். கருணைதான் அவனுடைய வடிவம். தண்ணீர் அதிகமாகக் குளிர்ந்த போது கட்டியாக (ஐஸ்) ஆகின்றது, மீண்டும் அது தண்ணீராகக் கரைந்து விடும். அதுபோல் கருணையின் மிகுதியால் இறைவன் எல்லையற்ற அருளேயொரு திருமேனியாகக் கொள்கின்றான் அவ் வடிவம் மாயா சம்பந்தமானதன்று ஏழுதாதுக்களாலானதன்று.

*- கிருபானந்த வாரியார்*





# தென்முகக் கடவுள்
## சிவ தத்துவங்கள்

**உயிர்களின் கன்ம(வினை) வகைகளும் அவற்றின் நிலைகளும்:**

**ஆகாமியம்:** தூலநிலை - விருப்பு வெறுப்புடன் செய்யப்படும் நல்வினை தீவினைகளாகிய இருவினைகள். இவை ஏறுவினை அல்லது மேல்வினை எனப்படும். மேல்பிறவிகளில் அனுபவிக்க ஈட்டும் வினைகள் யாவும் ஆகாமியம் ஆகும்.

**சஞ்சிதம்:** சூட்சும நிலை - செய்த இருவினைப் பயனாகிய பாப புண்ணியங்களை அனுபவிக்கத் தக்க முதிர்ச்சி அடையாதிருக்கும் வினைகளின் தொகுதி (குவியல்). இது தொல்வினை, முன்வினை, பழவினை, அவ்வினை, முந்தி நின்றவினை என்று பல பெயர்களால் சொல்லப்படும். சுருங்கச் சொல்லின் ஒரு ஆன்மா பல பிறவிகள் தோறும் செய்த வினைகளின் நிலைக் களஞ்சியமே சஞ்சிதம் எனப்படும்.

**பிராரத்தம்:** அதிசூக்கும் நிலை - இப்பிறப்பில் அனுபவித்தல் பொருட்டு அளிக்கப்பட்ட இன்ப துன்பங்கள் பிராரத்தம் எனப்படும். முன்னை வினைகளின் பலன் தர முதிர்ச்சியடைந்தவற்றின் புண்ணிய பாவ அல்லது இன்ப துன்பப் பலன்கள் இப்பிறப்பில் அனுபவத்திற்கு வந்துள்ள நிலை. இது நுகர்வினை அல்லது ஊழ்வினை அல்லது நிகழ்வினை என்றும் சொல்லப்படும்.

**பிராரத்த வினை அனுபவத்திற்கு வரும் வாயில்கள்:** ஆதி பௌதிகம், ஆதி ஆன்மிகம், ஆதி தைவிதம் என்ற மூன்று வாயில்கள். இவை தாபத்திரீயம் எனப்படும்.

1. **ஆதிபௌதிகம்:** நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் முதலான பஞ்ச பூதங்களால் ஓர் உயிருக்கு ஏற்படும் இன்ப துன்பங்கள். (உ.ம்) காற்று, மழை, பூகம்பம், வரட்சி, கடல்கோள், எரிமலை வெடிப்பு, இடி, மின்னல், பனி முதலான வற்றால் நாமடையும் பலா பலன்கள்.

2. **ஆதி ஆன்மிகம்:** ஓர் உயிருக்கு பிற உயிர்களால் ஏற்படும் இன்ப துன்பங்கள். துரோகம், ஏமாற்று, விஷக்கடி, பலி, உறவினரால், நண்பர்களால், விலங்குகளால், பறவைகளால், புழு பூச்சிகளால் ஏற்படக் கூடிய இன்னல்கள், உதவிகள் மற்றும் நன்மைகள்.

3. **ஆதி தைவிதம்:** கருவிலேயே, பிறப்பிலே ஏற்படும் உடல், மனநலக் குறைபாடுகள் மற்றும் கருவிலேயே திருவீரிய நன்மைகள்.

தொடரும்




காவடி
கற்பூரம்

1st May-16th May
Call Monday-Friday
From 9am - 5pm

பிரபா டிரேடிங் கம்பனி

**கேள்வி–பதில் போட்டி!**

போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு
பெறுமதி வாய்ந்த தெய்வீகப்பரிசு

**இந்த வருடம் தமிழ் வருடப்பிறப்பின் பெயர் என்ன?**

❖துர்முகி
❖விக்ரம
❖விகாரி

Call Now & Win

**FLEX Publications - 0778 335 552**


ABBI TECH SYSTEM
SUN TV, KTV, ESPN, ANGEL TV, STAR CRICKET
இன்னும் 200க்கும் மேற்பட்ட Channels கொண்ட Satellite Antenna மலிவான விலையில் பொருத்தித்தரப்படும்.
உடனடி திருத்தவேலைகள் மற்றும் புதிய இணைப்புகளுக்கு அழையுங்கள்
0779 000 857
Samsung SMART TV
நீங்கள் வீட்டில் இருந்தவாறே சகலவிதமான Satellite Antenna க்களிற்கும் உடனடி Recharge செய்துதரப்படும்
Star Vijay
Sun TV
Mega TV
Chutti TV
Sun Music
Adithya TV
Sun News
SUN TV | KTV | ESPN
ANGEL TV | STAR CRICKET
ACCEPTED
No.7 1/20, Galle Road, Colombo 06. | E-mail : abbitec@yahoo.com
Tel: 011 2591133 / 077 9000857

# Kreation
(House of Cotton (Pvt.) Ltd.)

QUALITY HANDLOOM MANUFACTURERS

COTTON SAREES
SILKMIX SAREES
LADIES KURTHAS
LADIES BLOUSES
WRAPAROUND
SHAWLS
GENTS KURTHAS
SHIRTS
SARONGS
COTTON FABRICS
SILKMIX FABRICS
COTTON BAGS
WOODEN JEWELLERY
TABLE CLOTHS
TABLE MATS
BED SHEETS
BED RUNNERS
BED QUILTS
PILLOWS
PILLOW COVERS
CURTAINS

213, Castle Street, Colombo 8.
Tel: 011 269 0357 | Fax: 011 268 5236

288, Galle Road, Colombo 4.
Tel: 011 255 9821, 255 9384

566A, Negombo Road, Wattala.
Tel: 011 293 3213, 293 2316

Mail :- kreation213@yahoo.com
Facebook :- www.facebook.com/kreationhoc
Web :- www.kreationhoc.com



YOUR ORDERS EXECUTED MAGNIFICANTLY

**Sri Lankan Quality Handloom Textiles**


SOLO movies
Video-Photo Studio
Mini Baby அல்பம் ஒன்று இலவசம்
Full HD Video,
Story Book Album,
Album Boxes,
&
Photo Framing
379-2/2 Galle Road,
Wellawatte,Col-06,
SRILANKA
Tel/Fax :112 36 22 55,
Mob: 0777 222 137.
Free For Our Pakage Baby Album
Made In Srilanka
Swiss- London- India-Colombo-Chavakachcheri-Nilavarai


புது
லக்மி
திருமண அழைப்பிதழ்கள்
New
Luckme wedding card
உங்கள்
இருமனங்களின் சங்கமம்
திருமணத்தில் ஆரம்பமாகும்
திருமண பத்திரிக்கை எம்மிடத்தில் அச்சிடப்படட்டும்
அழகிய அழைப்பிதழ்களின் அமைவிடம் www.Luckmecards.com
379,2/2 Galle Road,Wellwatte.Tel.112 36 22 55,Mob.0777 222 137.
203 Yarl Road Nunavil, Chavakacheri.Tel : 021 227 11 66 / 077 558 99 55.


New
Banquet Hall in Wellawatte
ஸ்ரீ ராம கான சபா
SRI RAMA GANA SABHA
Planning A Wedding?
திருமண மண்டபம்
உங்கள் மங்கள நிகழ்வை
எமது மண்டபத்தில் நிறைவேற்றிக்
கொள்ளுங்கள்.
Vegetarian Only
Wedding, Puberty Ceremony, Engagement,
Reception, Birthday Party & Any Function
Special Full Packages Available
150 பேர் வரை சைவ உணவு வகைகள்
அடங்கலாக அனைத்து ஒழுங்குகளும்
Full Service Catering
57, Vivekananda Road, Colombo -06, Wellawatte.
Tel. 077 44 35 071, 077 55 899 55.




கன்னி பாதம் தொட்டு மெட்டியிடும்
நாள் கனிந்திட
இன்றே இணையுங்கள்.

www.realmatrimony.com

RealMatriimony
Find your Life Partner.

Call us: 011-4380900

# திருக்குறள் தெளிவு



## 9. விருந்தோம்பல்

**01. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு**

**பொருள்:** மனைவியுடன் வீட்டில் இருந்து பொருள்களைப் பேணி இல்வாழ்க்கை நடத்துவ தெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டேயாகும்.

**02. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று**

**பொருள்:** விருந்தாக வந்தவர் வீட்டின் வெளியே இருக்கத் தான் மட்டும் உண்பது சாவாமருந்தாகிய அமிழ்தமேயாயினும் அது விரும்பத்தக்கது அன்று.

**03. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.**

**பொருள்:** நாள்தோறும் தன்னை நாடிவரும் விருந்தினரைப் போற்றுகின்றவனுடைய வாழ்க்கை துன்பத்தால் வருந்திக் கெடுதல் என்றுமே இல்லை.

**04. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்**

**பொருள்:** முகமலர்ச்சியுடன் நல்ல விருந்தினரைப் போற்றுகின்றவனுடைய வீட்டில் திருமகள் மனம் மகிழ்ந்து வாழ்வாள்.

**04. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.**

**பொருள்:** விருந்தினரைப் போற்றியபின் எஞ்சியதைத் தான் உண்ணுகின்றவனுடைய நிலத்தில் விதைக்காமலேயே பயன் விளையும்.

**05. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு**

**பொருள்:** வந்த விருந்தினரைப் போற்றி இனி வரும் விருந்தினரை எதிர்பார்த் திருக்கின்றவன் வானுலகத்திலுள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினனாவான்.

**06. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்**

**பொருள்:** விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இன்ன அளவிலானது என்று கூறமுடியாது. விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவாக அஃது அமையும்.

**07. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.**

**பொருள்:** விருந்தினரை ஓம்பி அந்த வேள்வியில் ஈடுபடாதவர், பின்னர் பொருளை வருந்திக் காத்துப் (பின்பு இழந்து) பயனை அடையாமற் போனோமே என வருந்தும் நிலையை அடைவர்.

**08. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு**

**பொருள்:** செல்வச் செழிப்புடன் இருக்குங் காலத்தில் வறுமை என்பது விருந்தோம்பலைப் போற்றாத அறியாமையாகும்: அஃது அறிவி லிகளிடமே காணப்படும்.

**09. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து**

அனிச்சமலர் முகர்ந்தவுடன் வாடிவிடும். விருந்தினரோ விருந்தளிப்பவரின் முகம் மலராமல் வேறுபட்டுத் தோன்றியவுடனேயே வாடி நிற்பர்.

தொடரும்

இரண்டு வயது ஆவதற்குள் நாம் பேச கற்றுக்கொள்கிறோம்.

ஆனால் எத்தனை வயது ஆனாலும் "எப்படி பேச வேண்டும்" என்பதை நாம் கற்றுக்கொள்வதில்லை.




# அன்பு நெறி

அன்பால் இந்த உலகத்தில் ஆகாத பொருளில்லை. உயிர்களிடத்து அன்பு செய் என்பதனையே சைவசமயம் அழுத்தமாய் ஆணித்தரமாய் வலியுறுத்திப் பேசுகிறது. அன்பு எவ்விதத் துன்பமும் இன்றி எவர்க்கும் எதனையும் கொடுத்தீயும் பெற்றியை உடையது. அன்பு என்ற சொல்லுக்குரிய பொருளை ஆழ்ந்து நோக்கினால் அது ஆதியும் அந்தமும் அற்ற இறைவனின் செயல்களைக் காட்டுவதாக அமைந்திருக்கும். அன்பு என்ற சொல்லில் அ என்பது உயிர் எழுத்து. ன் என்பது மெய்யெழுத்து. பு என்பது உயிர்மெய் எழுத்து. உலகில் உயிர்மெய் அமைதி பெற்று வாழ்வதற்கு அன்பே மிக உயர்ந்த நெறியாகும். அதோடு மட்டுமல்லாது அ என்பது தமிழின் முதல் எழுத்து. ன் என்பது இறுதி எழுத்து. பு என்பது ஈரிதழ்களும் இணையும் போது பிறக்கும் எழுத்து. உலகில் கடை நிலையில் உள்ள சீவான்மாவும் முதல் நிலையில் உள்ள பரமான்மாவும் ஒன்றுகூட அன்புநெறியே காரணமாகும். இதனையே திருமூலர்.

**"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."**

என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

**பலரால் பாராட்டப்படும் அன்புநெறி**


நாயன்மார்களில் கண்ணப்பரின் அன்புநெறிப்பட்ட தொண்டு நெறியையே பலரும் பாராட்டிப் பேசுவர். பட்டினத்தார் அன்புநெறி கொண்ட கண்ணப்பரையும், துறவு நெறிகொண்ட திருநீலகண்டரையும், பக்திநெறி கொண்ட சிறுத்தொண்டரையும் பாராட்டுவதனை,

**"வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன்**
**அல்லேன் மாதுசொன்ன**
**சூளால் இளமை துறக்கவல்லேன்**
**அல்லேன் தொண்டுசெய்து**
**நாளாறில் கண்ணிடத்து அப்பவல்லேன்**
**அல்லேன் நானினிச் சென்று**
**ஆளாவது எப்படியோ**
**திருக்காளத்தி அப்பருக்கே."**

என்னும் பகுதியால் உணரலாம்.


பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான ஆன்மிக கேள்வி-பதில் போட்டி!

PETER STORES
FASHIONABLE HOUSE
FOR QUALITY TEXTILES
201,Galle Road,Wellawatte.
Tel : 2586066



நட்சத்திரங்கள் எத்தனை?

- 12
- 27
- 9

1st May-16th May
Call Monday-Friday
From 9am - 5pm

Call Now & Win School Uniform

FLEX Publications - 0778 335 552

ஸ்ரீ

| | | |
|---|---|---|
| 27 | 20 | 25 |
| 22 | 24 | 26 |
| 23 | 28 | 21 |

ஸ்ரீ ஸ்ரீ

ஸ்ரீ

கொஞ்சம் உதிரிப் பூக்களை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

யந்திரத்தின் முன்பு நெய் அல்லது நல்லெண்ணய் தீபம் ஒன்றினை ஏற்றிவையுங்கள்.

“தாயே மகாலட்சுமி, மனதார உன்னை வணங்கும் எங்கள் மனையில் மங்களங்கள் யாவும் பெருக வேண்டும். மங்காத செல்வம் சேரவேண்டும் என்றென்றும் உன்னருள் நீங்காது இருக்க வேண்டும்!” என்று மனதார வேண்டுங்கள்.

மகாலட்சிமியே போற்றி! மங்கள லட்சுமியே போற்றி! திருமகள் தாயே போற்றி! அன்னலட்சுமியே போற்றி! கிருக லட்சுமியே போற்றி! நாரண லட்சுமியே போற்றி! நாயகி லட்சுமியே போற்றி! ஓம் குபேர லட்சுமியே போற்றி போற்றி!

என்று சொன்னவாறே சிறிது பூவை நீங்கள் வரைந்திருக்கும் குபேர யந்திரத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் போடுங்கள்.

**வளம் யாவும் தந்திடுவாய் வைஸ்ரவணா போற்றி!**

**குலம் செழிக்கச் செய்திடுவாய் குபேரனே போற்றி!**

**செல்வங்கள் தந்திடுவாய் சிவன் தோழா போற்றி!**

**உளமாரத் துதிக்கின்றோம் உத்தமனே போற்றி போற்றி!**

இந்தத் துதியைச் சொல்லி குபேரனைக் கும்பிடுங்கள். தூப, தீபம் காட்டுங்கள். சர்க்கரை கலந்த பால் அல்லது பால் பாயசம் நிவேதம் அவ்வளவுதான், பூஜை செய்தாயிற்று. அன்று மாலை உங்களால் இயன்ற அளவுக்கு மங்களப் பொருள்களை பிறருக்கு வைத்துக் கொடுங்கள். வசதி குறைவாக இருப்பின் இதனை ஒன்பதாவது வார முடிவில் தந்தாலும் போதும்.

பூஜை செய்த அன்று மாலை ஏதாவதொரு பெருமாள் கோயிலுக்குச் சென்று தாயாரை தரிசியுங்கள். மறுநாள், குபேர யந்திரத்தில் வைத்து பூஜித்த காசுகளை எடுத்து பத்திரப்படுத்தி வையுங்கள். ஒரு துணியை நனைத்து அதனால் குபேர யந்திரக் கோலத்தைத் துடைத்துவிடுங்கள்.

அடுத்த வெள்ளிக்கிழமை அல்லது பௌர்ணமி நாளில் முன்புபோலவே குபேர யந்திரம் வரைந்து வேறு காசுகளை வைத்து பூஜித்து, மாலையில் கோயிலுக்குச் செல்வதுவரை எல்லாவற்றையும் செய்யுங்கள்.

இப்படி ஒன்பது வெள்ளிக்கிழமைகள் அல்லது பௌர்ணமிகளில் பூஜை செய்து முடித்ததும், அடுத்து வரும் வெள்ளிக்கிழமை அல்லது பௌர்ணமி அன்று, சேர்ந்திருக்கும் எண்பத்தொரு காசுகளையும் எடுத்துக் கொண்டு சென்று ஏதாவது ஒரு சிவன் கோயில் உண்டியலிலோ அல்லது பெருமாள் கோயிலில் தாயார் சன்னதியில் உள்ள உண்டியலிலோ செலுத்துங்கள். (சிவபெருமானே குபேரனுக்கு எல்லா செல்வங்களையும் அளித்தவர். அதோடு அவனை நண்பனாகவும் ஏற்றவர். எனவேதான் சிவாலயத்திலும் செலுத்தலாம்).

அன்றையதினம் உங்களால் இயன்ற அளவு மங்களப் பொருட்களை பெண்களுக்கு வைத்துக் கொடுங்கள். அன்றைய தினம் மகாலட்சுமியே ஏதாவது ஓர் உருவில் அதனைப் பெற வருவாள் என்பது நம்பிக்கை. எனவே, குறைவாகக் கொடுத்தாலும் மனதாரக் கொடுங்கள்.

ஒன்பதாவது வார (மாத) பூஜை முடிந்த நாள் முதல் உங்கள் வீட்டில் நிச்சயம் செல்வவளம் சேரும் நிம்மதி, சந்தோஷம், உற்சாகம் நிறையும். வருடத்துக்கு ஒருமுறை இந்த லட்சுமி குபேர யந்திர பூஜையைச் செய்யுங்கள். குறையாத செல்வமும், நிறைவான நிம்மதியான வாழ்வும் நிச்சயம் கிட்டும்.

## இடைவெளியை நிரப்புங்கள்!

1. மனிதர்களுடைய சகல துன்பங்களுக்கும் காரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒ | | பி | | த | |

2. சிவனை பரம்பொருளாக வழிபடுவது

| | | |
|---|---|---|
| | வ | |

3. ஓம் என்பது

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பி | | ண | | ம | | தி | | ம் |

4. செல்வ வளம் தருவது

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ட் | | ய | | ரு | |

5. நாம் வாழும் அண்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பி | | ப | | ச | |

# சைவநெறி

## வினா விடை தொகுப்பு
## தரம் 8

## 1. கடவுள்

**1. சர்வவியாபகம் என்பதன் விரிந்த பொருள் யாது?**

இறைவன் எங்கும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர் என்பது இதன் விரிந்த பொருளாகும்.

**2. சர்வவியாபகம் என்பது எதனுள் அடங்கும்?**

சைவ சமயம் கூறும் இறைவனின் இயல்புகளில் அடங்கும்.

**3. சர்வவியாபகம் என்பது பொதுவாக எதனைக் குறிக்கிறது?**

சொரூப நிலையைக் குறிக்கிறது. சர்வ வியாபகம் என்பது இறைவனின் சிறப்பாகும்.

**4. தமிழில் கடவுள் என்னும் சொல் எதனைப் புலப்படுத்துகிறது?**

சர்வ வியாபகம் என்னும் சொல்லின் பொருளைப் புலப்படுத்துகிறது.

**5. கடவுள் என்னும் சொல் எதனைக் குறிக்கிறது?**

கடவுள் என்பது இறைவன் எம்முள்ளும், எமக்கு அப்பாலும் கடந்து நிறைந்துள்ளவர் என்பதைக் குறிக்கும்.

**6. இறைவன் எங்கும் நிறைந்துள்ளார் என்பதை எதன் மூலம் அறியலாம்?**

சாந்தநோக்கிய உபநிடதத்தில் வரும் சுவேதகேதுவுக்கும், அவரது குரு உத்தாலகருக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலால் அறியலாம்.

**7. இறைவன் எங்கும் நிறைந்துள்ளார் என்பதை எவ்வாறு உத்தாலகர் சான்று மூலம் காட்டினார்?**

நீர் நிறைந்த பாத்திரத்தினுள் உப்புக் கட்டியை இட்டு அடுத்த நாள் பார்த்தபோது காணாமல் நீர் முழுவதும் கலந்து இருந்தது இதே போன்று இறைவன் உலகம் எங்கும் பரந்துள்ளார் என்றார்.

**8. இறைவனின் வியாபகத் தன்மையைத் திருநாவுக்கரசு சுவாமிகள் எவ்வாறு காட்டுவார்?**

"ஓசை ஒலியெலா மானாய் நீயே உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே" எனக் காட்டுவார்.

**9. "வேற்றாகி விண்ணாகி..." என்ற தேவாரம் யாரால் பாடப்பட்டது?**

அப்பர் சுவாமிகள், திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டு முதலாவதாகப் பாடிய தேவாரமாகும்.

**10. "வானாகி மண்ணாகி..." என்ற திருவாசகத் திலுள்ள பாடல் எதனைத் தெளிவுபடுத்துகிறது?**

இப்பாடல் திருவாசகத்தில் உள்ள திருச்சதகப் பாடலாகும். இறைவனின் சர்வவியாபக இயல்பைத் தெளிவாக கூறும்.

**11. "வேற்றாகி விண்ணாகி..." என்ற தேவாரம் மூலம் இறைவன் சர்வவியாபகன் என்ற கருத்து எவ்வாறு விளக்கப்படுகிறது?**

- புவி, விண் எல்லாமாய் இறைவன் இருக்கிறான்
- அவன் அன்பின் ஊற்றாய் என் உள்ளத்தில் ஒளித்தும் இருக்கிறான்.
- என்றும் ஒழியாத சத்தத்தின் ஒலியாகி "ஓம்" என்று ஒலித்துக் கொண்டிருக்கிறான்.
- அவன் காற்றாய் உலகெங்கும் கலந்திருக் கிறான்.
- அத்தகைய கையிலைமலை இறைவனுக்கு வணக்கம் செலுத்துகிறேன் என்பது கருத்தாகும்.

**12. ஐம்பூதங்களும் எவை?**

ஆகாயம், புவி, காற்று, நெருப்பு, நீர் என்பவையாகும்.

**13. "வானாகி மண்ணாகி" என்ற பாடல் யாரால் பாடப்பட்டது?**

மாணிக்கவாசகரினால் பாடப்பட்டது. இறைவன் ஐம்பூதங்களையும் உடல், உயிர், உண்மை, இன்மை என்பவையாகவும், அவை அனைத் திற்கும் தலைவனாகவும் விளங்குகிறான் எனக் கூறுகிறது.

**13. இறைவனின் வியாபகத் தன்மையைக் கூறும் நூல்கள் எவை?**

வியாபகத் தன்மையைச் சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

*தொடரும்*



# திருமண பொருத்தம்

| ஆண் | பெண் |
|---|---|

**ஆண்**

ராசி - மகரம் நட்சத்திரம் - அவிட்டம்

**பொருந்தக்கூடிய பெண் நட்சத்திரங்கள்**

9 பொருத்தம் - பூரட்டாதி - மீனம்

8 பொருத்தம் - ரோகிணி | புனர்பூசம் - கடகம் | ஆயிலியம் | விசாகம் - துலாம் | திருவோணம் | பூரட்டாதி - கும்பம்

7 பொருத்தம் - விசாகம் - விருச்சிகம் | பூராடம்

தவிர்க்க வேண்டிய பெண் ராசிகள் - மிதுனம் | சிம்மம்

**பெண்**

ராசி - மகரம் நட்சத்திரம் - அவிட்டம்

**பொருந்தக் கூடிய ஆண் நட்சத்திரங்கள்**

8 பொருத்தம் - மூலம் | திருவோணம்

7 பொருத்தம் - விசாகம் - துலாம் | பூராடம்

6 பொருத்தம் - ரோகிணி | புனர்பூசம் - கடகம் ஆயிலியம் | விசாகம் - விருச்சிகம்

தவிர்க்க வேண்டிய பெண் ராசிகள் - மிதுனம் | சிம்மம்

*அடுத்த இதழில் கும்பம் ராசி - அவிட்டம் நட்சத்திர திருமணப் பொருத்த விபரங்களை எதிர்பாருங்கள்.*



## திருமண சேவை

| | |
|---|---|
| விமலன் திருமண சேவை - 011 6477181542 | **மயில்வாகனம் சர்வதேச திருமண சேவை**<br>22/1, சுபோதாராம வீதி, தெஹிவளை.<br>076 657 7292 |
| மீன்மகள் திருமண சேவை - 076 6606422 | **கனகராஜன்**<br>19, கல்பொத்த வீதி, கொழும்பு 13.<br>072 324 4945, 072 524 6419 |
| 57, விகாரை லேன், வெள்ளவத்தை - 076 6069104 | **குருக்கள் ஜோதிஷம்**<br>165/6, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13.<br>011 243 1982 |
| 238, அரசடி வீதி, யாழ்ப்பாணம் - 021 2227147 | **சக்தி திருமண சேவை**<br>30, ரமணி மாவத்தை, நீர்கொழும்பு. 031 223 2130 |
| www.thaalee.com - 2523127 | **சந்தோஷ் திருமண சேவை**<br>85 1/1, மெஷஞ்சர் வீதி, / 56 C, ஆண்டிவால் வீதி, கொழும்பு 12.<br>077 530 1437 / 077 677 6630 |
| www.thirukalyanam.lk - 0777 877717 | |
| **குரும்ப சிட்டியூர் வேல்அமுதன்**<br>8-3-3, Metro Apartment 55th Lane, வெள்ளவத்தை.<br>011 236 0488 | |
| **ராதா கிருஷ்ணா திருமண சேவை**<br>5E, வில்லியம் சந்தி, தெஹிவளை. 011 552 2084 | |

## திருமண வைபவங்களுக்கான...

| | |
|---|---|
| விவாக பதிவாளர் | Ms. Chandrani - 071 312 2889 |
| மணவறை | UMESH - 077 999 5701 |
| வாடகை நகைகள் | Joy Glorious - 077 494 9961 |
| திருமண ஒப்பனை | Brintha - 2 593 693 / 077 633 1257 |
| ஜோதிடம் | Nalendra Institute - 077 2951368 |
| ஜோதிடம் | Kurukkal Jothisham - 077 656 7869 |
| ஜோதிடம் | J. Sharma - 258 6313 |
| குருக்கள் | S.S. Kurukkal - 077 8955986 |
| திருமண ஆடைகள் | Little Asia - 011 250 4470 |
| புகைப்படம் / வீடியோ | Chhaya Rabeshan - 077 361 9649 |
| மெகந்தி | Mehendi - 0777 667 727 |
| திருமண வாகனம் | Mal-Key Rent a Car - 2 365 365 |
| திருமண சைவ உணவு | Mahen's Catering - 0777 563 620 |
| திருமண சைவ உணவு | Dushi Catering - 077 743 1159 |
| திருமண பரிசுகள் | Visgha - 077 277 4776 |



## குன்றாத செல்வம் தரும்

# லட்சுமி குபேர பூஜை

**காசு, பணம் துட்டு, மணி, ரூபாய், டாலர், யூரோ எப்படிச் சொன்னாலும் சரி... எல்லோருக்கும் அவசியம் தேவைப்படுவது இதுதான்.**

செல்வம் சேர்ந்துவிட்டால் மட்டும் போதாது.. அது தேயாமல் பெருகவேண்டும். தொலையாத நிதியம் அதாவது கரையாமல் சேரும் செல்வம் வேண்டும் என்றுதான் அபிராமிபட்டரே அம்மனிடம் வேண்டுகிறார்.

உங்கள் வீட்டில் செல்வம் சேரவேண்டுமா? திருமகளின் பார்வையும் குபேரனின் அருளும் சேர்ந்து குறைவற்ற பொருட்செல்வத்தை நீங்கள் பெற வேண்டுமா?

இதோ அதற்கான எளிய பூஜை முறை உங்களுக்காகவே தரப்பட்டிருக்கிறது.

ஸ்லோகம் சொல்வது, மந்திரங்களைப் படிப்பது, சுற்றிச் சுற்றி வலம் வருவது, ஏராளமான பூஜைப் பொருட்களை வாங்குவது இப்படி எதுவும் இந்த பூஜைக்கு வேண்டாம். ஆனால் ஒரே ஒரு விஷயம் அவசியம் வேண்டும். அது உண்மையான பக்தியும், நம்பிக்கையுடனான வழிபாடும்தான். இவற்றுக்கு நீங்கள் உத்தரவாதம் தந்தால் போதும். உங்கள் வீட்டில் செல்வமகள் நிரந்தர வாசம் செய்வாள் என்பது நிச்சயம்!

பூஜையைத் தொடங்குவதற்கு சில முன்னேற் பாடுகள் அவசியம். முதலாவது, நீங்கள் பூஜை செய்யப்போகும் நாளைத் தேர்ந்தெடுப்பது.

தொடர்ந்து ஒன்பது வாரம் அல்லது ஒன்பது மாதம் குறிப்பிட்ட தினத்தில் செய்ய வேண்டிய பூஜை இது. எனவே ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமைகளில் அல்லது மாதம் ஒரு நாள் பௌர்ணமி தினத்தில் செய்வது சிறப்பு. உங்களுக்கு உகந்த தினத்தைத் தேர்வு செய்து கொள்ளுங்கள்.

ஆண், பெண் என எவர் வேண்டுமானாலும் இதைச் செய்யலாம். அதே சமயம் பூஜையைத் தொடர்ந்து ஒருவரே செய்வது நல்லது. இயலாத சமயத்தில் அதே குடும்பத்தின் வேறு உறுப்பினர் செய்யலாம். குடும்பத்திலுள்ள எல்லோரும் கலந்துகொள்வது மிகச் சிறப்பானது.

இரண்டாவதாக இந்த பூஜையைச் செய்திட ஒருமுறைக்கு ஒன்பது காசுகள் என, ஒன்பது தடவைக்குமாகச் சேர்த்து எண்பத்தொரு நாணயங்கள் அவசியம். ஒரு ரூபாய் முதல் உங்கள் வசதிக்கு ஏற்ற தொகை வரையான காசைப் பயன்படுத்தலாம். இதில் முக்கியமான விஷயம் எண்பத்தொரு காசுகளும் சம மதிப்பு உடையவையாக இருக்க வேண்டும் என்பதுதான். உதாரணமாக ஒரு ரூபாய் நாணயத்தைப் பயன்படுத்த முடிவு செய்தால் எண்பத்தொரு ஒரு ரூபாய் நாணயங்கள் தேவை. இதேபோல் உங்கள் வசதிக்கு ஏற்ப எண்பத்தொரு காசுகளை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் குபேர யந்திர பூஜை செய்யத் தயாராகிவிட்டீர்கள்.

வெள்ளிக்கிழமை அல்லது பௌர்ணமி தினம் என நீங்கள் பூஜை செய்யத் தேர்வு செய்த நாளில், அதிகாலையில் எழுந்து நீராடிவிட்டு உங்கள் வீட்டு பூஜை அறையில் குலதெய்வத்தை மனதார வேண்டி தீபம் ஏற்றுங்கள்.

அடுத்து செய்யும் பூஜை தடைபடாமல் நடக்கவும், குறைவிலா செல்வம் குறையற்ற வழியில் சேர்ந்திடவும் மகாகணபதியை மனதாரத் துதியுங்கள்.

அந்த நாளின் நல்ல நேரத்தில் உங்கள் வீட்டு பூஜையறையில் ஒரு பலகையின் மீது முன்பக்கம் படத்தில் தரப்பட்டிருப்பது போன்று ஒரு கட்டத்தை வரைந்து எண்களையும் எழுதுங்கள். இந்தக் கட்டத்தை குங்குமத்தால் வரைவதும், எண்களை அரிசிமாவால் எழுவதும் சிறந்தது. திருமகளைக் குறிக்கும் விதமாக எழுதப்பட்டுள்ள 'ஸ்ரீ' எனும் எழுத்தை மஞ்சள் பொடியால் எழுதலாம். இதுவே லட்சுமி குபேர யந்திரக் கோலம்.

அடுத்து, கட்டங்களில் எழுதப்பட்டுள்ள எழுத்துக் களுக்குப் பக்கத்தில் கட்டத்திற்கு ஒன்று வீதம் ஒன்பது நாணயங்களை வையுங்கள். எழுத்தை அழித்தோ, மறைத்தோ வைக்கக்கூடாது எனவே யந்திரத்தை வரையும் போதே அதற்கு ஏற்றபடி வரைந்து கொள்ளுங்கள்.

நாணயம் மகாலட்சுமிக்கு அடையாளம். இப்போது குபேர யந்திரத்தில் திருமகள் எழுந்தருளி யிருப்பதாக ஐதிகம்.

இனி, லட்சுமி குபேர யந்திரத்தை நீங்கள் பூஜிக்க


GLO
DIGITAL
WEDDING PHOTOGRAPHY & VIDEOGRAPHY
GLO
DIGITAL
118A, Galle Road, Colombo - 06
+94 77 3000873, +94 11 2502182
www.glodigitalstudio.com, www.facebook.com/glodigital

# SHAHANA FLOWER SHOP




NO: 4-1/2, Bothirukkarama Road, (Vihara Lane) Wellawatte.
**Tel: 0112 058 541 | Hotline: 077 663 83 93**
E-mail: karthik721@hotmail.com | FB: shahana flower shop
Web: www.shahanaflowershop.blogspot.com

We use FRESH FLOWERS



# காலம் கொடுக்கும் வெற்றி விருந்து

காலம் என்பது ஒரு கணக்கைக் காட்டுவது. அந்தக் கணக்கை மாற்ற முடியாது. ஆனால் அந்தக் காலம் மாற்றங்களுக்குட்பட்டது.


இந்தப் பொழுது நிகழ்காலம். இதனைச் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே இந்தச் சொல்லின் முதல் எழுத்து இறந்த காலமாகி விட்டது. ஒவ்வொரு கணமும் நிகழ்காலம் இறந்து கொண்டே இருக்கிறது. வருங்காலம் என்பது நம்பிக்கைக்கு ஒரு வழித்தடம். நிகழ்காலத்தில்தான் எதுவும் நிகழ்ந்து முடிய வேண்டும்.

நேற்றைய நிகழ்ச்சிகள் இன்றைக்குப் பாடங்கள். இன்றைய நிகழ்ச்சிகள் நாளைக்குப் பாடங்கள். நாளைய நிகழ்ச்சிகள் தலை முறைக்குப் பாடங்கள். கழிந்த காலம் செம்மையாக இருந்தால்தான் வருங்காலம் சிறப்பாக அமையும். இன்று உழைப்பிருந்தால்தான் நாளைக்குப் பலன் இருக்கும்.

சாதனை புரிந்தவர்களுக்குத்தான் சரித்திரம் எழுதப்படுகிறது. சத்தியம் பேசியவன் சொல்தான் தத்துவம் ஆகிறது. தர்மத்தின் வழி நடந்தவனைத்தான் உலகம் தலை வணங்குகிறது.

காலம் ஒவ்வொரு கடமைக்கும் எல்லை வகுத்துக் கொடுத்திருக்கிறது. காலம் வளர்ச்சிக்கு வழியமைத்துக் கொடுத்திருக்கிறது.

இன்று குழந்தை எல்லோரும் எடுத்துக் கொஞ்சுவார்கள். சில ஆண்டுகள் கழித்து அவன் சிறு பிள்ளை. கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போவார்கள். மேலும் சில காலம் கழிந்த பின்பு வாலிபன். அவன் வழித்தடம் பார்த்து அவனுக்கு நடந்து செல்லத் தெரியும். ஆம் தெரிய வேண்டும்.




சிறு குழந்தையாக இருக்கும்போது அவன் கற்றுக் கொள்வதுதான், அவனுடைய அஸ்திவாரத்தை ஆட்டமில்லாமலமைக்க உதவும். அதனால் சுற்றுச் சூழலை இனிமையாக அமைக்க வேண்டும்.

பெற்றோரின் வாழ்க்கை நடைமுறைதான் பிள்ளைக்கு மிகப் பெரிய பாடம். தங்களுக்குள் அவ்வப்போது ஏற்படும் சிக்கலை, குழந்தைக் கெதிரில் தம்பட்டமிட்டுக் காட்டக் கூடாது. இன்மையாகப் பேசுவதை முறையாக்கிக் கொண்டால், அதைப் பார்க்கும் குழந்தைக்கு அதுவே இயல்பாகி விடும். பின் நாட்களில் கோபம் கொள்ள வேண்டிய சூழ்நிலையில்! ஒரு அன்புக் கண்டிப்பாகிப் போகுமே தவிர ஆத்திரத்தில் கீழ்த்தரமாகி விடாது.

ஞானக்கல்வியை உணர்ந்து படிக்கப் பழக்க வேண்டும். அறிவின் படிப்பு ஒரு அளவுக் குட்பட்டது. உணர்வின் படிப்பு உண்மையிலேயே மிகவும் உயர்ந்தது.

சந்தேகங்கள் எப்போதுமே நம்மைச் சந்தித்துக் கொண்டு தான் இருக்கின்றன. விளக்கங்களின் பரப்பு அதிகமாகிக் கொண்டே வரும்போது விலகிக் கொள்ள மிகவும் சிரமமாகப் போய் விடுகிறது. அதனால் விளக்கங்களில், விவரங்களில்லை என்றோ அவை சரியில்லை என்றோ முடிவாக கூற இயலாது.

கூந்தலுக்கு இயற்கையிலேயே மணமில்லை, என்று திரிசூலக் கோலேந்திய எம் பெருமானிடமே எதிர்வாதம் செய்தானே நக்கீரன், அந்தக் காலம் தொட்டு, அதுவே உண்மையென்று அறுதியிட்டு வாதம் செய்துதான் வந்திருக்கிறது.

அறிவாய்க் கிடைத்த அனுபவம். உணர்வால் அகழப்படவேண்டும் ஆழ்ந்து சிந்திக்கும் போதுதான் காய்ச்சிய பால் ஏடு போல், உண்மைகள் உந்தப்பட்டு உள்ளத்தில் இறுக்கம் கொள்கின்றன.

வாழ்க்கையின் அனுபவங்கள் வரம்பற்றவை. அந்த அனுபவங்களில் இனிப்பானவையும் இருக்கும். கசப்பானவையும் இருக்கும். எடுத்துக் கொள்வதும், விடுத்து விடுவதும் எப்படியிருந்தாலும் எல்லாவற்றையும் அறிந்து கொள்வதில் அக்கறை கொள்ள வேண்டும்.

# ஆரோக்கியமாக வாழ ஆசனங்கள்

# பெண்கள்

## செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்

ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஆண்களைப் போன்றே பெண்களும் யோகாசனப் பயிற்சிகள் செய்து வருவது மிக நல்லது. இன்று யோகாசனப் பயிற்சிகள் சொல்லிக்கொடுக்க பல அமைப்புகள் உள்ளன. பெண்களே அங்கு கற்றுக் கொடுக்கிறார்கள்.

புத்தகங்களைப் பார்த்துச் செய்வதைவிட ஒரு முறை தக்க யோகாசனப் பயிற்சியாளரிடம் பயிற்சி எடுத்துக் கொண்டு யோகாசனம் செய்வது நல்லது.

பெண்களுக்குப் பொறுப்பும், கடமையும் ஆண்களைவிட அதிகமாகவே உள்ளன. எனவே ஒரு பெண் ஆரோக்கியமாக இருந்தால் குடும்பம் நன்றாக இருக்கும்.

பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் சூதகக் கோளாறுகள் ஏற்படுகின்றன. சோர்வு, மயக்கம், தலைவலி ஆகியவை ஏற்படுகின்றன. நரம்பு பலவீனத்தினால் ஹிஸ்டீரியா ஏற்படும் வாய்ப்பு உண்டு. இதற்கு தக்க யோகாசனம் சர்வாங்காசனம் என்ற ஆசனமாகும்.

ஆண்களைவிடப் பெண்களுக்கு தைராய்டு சுரப்பிகள் நன்றாக இருக்க வேண்டியது அவசியம். தைராய்டு சரியாகக் கிடைத்தால்தான் வீட்டு விலக்காதல், பிரசவித்தல், குழந்தைகளுக்குப் பால் கொடுத்தல், இளமை, அழகு கிடைத்தல் போன்ற எல்லாவித நன்மைகளும் கிடைக்கும்.

தைராய்டின் சுகம் கெட்டால், எல்லாச் சுகங்களும் கெட்டுவிடும். எனவே சுகமாக வாழ தைராய்டு பரிபூரணமாகக் கிடைக்க வேண்டும் என்றால் சர்வாங்காசனத்தை தினமும் (மாதவிலக்கு நாட்களிலும், அதற்கு முன்பின் உள்ள நாட்கள் தவிர) செய்து வரவும்.

கர்ப்பமடைந்த பெண்கள் இந்த ஆசனத்தைச் செய்யக்கூடாது. பதினைந்து வயதிற்குட் பட்டவர்களும் செய்யக் கூடாது. உயர்ந்த ரத்த அழுத்தம், தாழ்ந்த ரத்த அழுத்தம் உள்ளவர்கள், இதயக் கோளாறு உள்ளவர்கள், கண்களில் கோளாறு உள்ளவர்கள் செய்யக் கூடாது.

இன்று கம்ப்யூட்டர் முன்பு அமர்ந்து பல மணி நேரம் பணி செய்பவர்களுக்கு இந்தப் பயிற்சி மிக நல்லது. தினமும் பத்து நிமிடம் செய்தால் கூடப் போதும். பத்மாசனம் செய்தால் மூச்சு சீராக இயங்கும், மனம் தெளிவாக இருக்கும்.

வஜ்ராசனம் செய்தால் வயிறு சம்பந்தமான நோய்கள் வராது. எனவே ஆசனங்கள் கற்றுக்கொள்ளுங்கள். தினமும் ஆசனம் போடுங்கள். மிகக் குறைந்த நேரம் செலவிட்டால் போதும், பெரும்பான்மையான வியாதிகள் வராது. வந்த வியாதி போய்விடும்.

தொடரும்


ஜெயகீதா ஜுவலர்ஸ்




No: 38 A, Sea Street Junction, Colombo. | Tel: 011 - 243 60 73

# சுபத்திரை

-யோகா

சூரிய பகவானுக்கு அர்ப்பிக்கக் கையில் நீரை ஏந்தியபடி மந்திரங்கள் ஓதிக்கொண்ருந்தார் காலவ மகரிஷி. அப்போது வான்வழியே சித்திரசேனன் என்ற கந்தர்வன் சென்றான். அவன் காலவ மகரிஷி நதியில் நின்று சூரியனை வழிபட்டுக்கொண்டிருந்ததைக் கவனிக்கவில்லை. மகரிஷி இருப்பது தெரியாமல் அவன் தாம்பூல எச்சிலைத் துப்பினான். அந்த எச்சில் காலவ ரிஷி கையில் ஏந்தியிருந்த நீரில் வந்து விழுந்தது. தம் கையில் ஏந்தியிருந்த நீரில் எச்சில் வந்து விழுந்ததும், அதற்கு என்ன காரணம் என்று காலவர் வானை அண்ணாந்து நோக்கினார். சித்திரசேனன் துப்பிய எச்சில் என்பதை அறிந்ததும் அவருக்கு அவன்மீது கோபம் வந்தது.




காலவ மகரிஷி துவாரகைக்குச் சென்று கிருஷ்ணனிடம் முறையிட்டார்.




நாரதர் சித்திரசேனனிடம் சென்று...




உன்னை கிருஷ்ணரிடமிருந்து காப்பாற்றும்படி இந்திரன், யமன், சிவன், பிரம்மா எல்லோரையும் கேட்டுப் பார்.
4
சித்திரசேனன் ஒவ்வொருவரிடமாகச் சென்றான். ஆனால் எல்லோரும் கையை விரித்துவிட்டார்கள். “கிருஷ்ணரை எதிர்த்து எங்களால் ஒன்றும் செய்ய முடியாது” என்று சொல்லிவிட்டார்கள்.
5
எல்லோரும் கைவிட்டுவிட்டதால் சித்திரசேனன் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தான், அப்போது அவனிடம் நாரதர் வந்தார்.
கவலைப்படாதே! உன்னைக் காப்பாற்றிக்கொள்ள இன்னொரு வழி இருக்கிறது. இன்று நள்ளிரவில் யமுனை நதிக் கரையில் போய் உட்கார்ந்துகொண்டு அழு. யாராவது பெண்மணி தென்பட்டால் அவள் உன்னைக் காப்பாற்றுவதாக வாக்களித்தாலன்றி உன் விஷயத்தைச் சொல்லாதே!
அப்படியே செய்கிறேன்.
6
உடனே நாரதர் அர்ஜுனனின் மனைவியும், கிருஷ்ணனின் சகோதரியுமான சுபத்திரையிடம் சென்று...
அம்மா! உன் காரியங்கள் எல்லாம் சுபமாக முடிய வேண்டுமானால் இன்று நள்ளிரவில் நீ யமுனை நதியில் ஸ்நானம் செய்து யாராவது கஷ்டப்படுகிறவர்கள் தென்பட்டால் அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டும். அப்பொழுது உனக்கு நிறையப் புண்ணியம் கிடைக்கும்.
அப்படியே செய்கிறேன் சுவாமி.
7

சுபத்திரை தன் தோழிகள் சிலருடன் அன்று இரவு யமுனை நதிக்குச் சென்று நீராடிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தாள். அப்போது யாரோ அழும் குரல் கேட்டது.




குரல் வந்த திசையை நோக்கிச் சென்றாள் சுபத்திரை.





நடந்த விஷயங்களை எல்லாம் சித்திரசேனன் கூறினான்.




தான் சித்திரசேனனுக்குக் கொடுத்த வாக்கைப் பற்றிச் சுபத்திரை அர்ஜுனனிடம் சொன்னாள்.





அடுத்த நாள் கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்குமிடையே பலத்த போர் நடந்தது. இருவரும் சளைக்காமல் சண்டையிட்டார்கள்.
12
கடைசியில் கிருஷ்ணர் சக்ராயுதத்தை எடுத்ததும், அர்ஜுனன் பாசுபத அஸ்திரத்தை எடுத்தான். இதைக் கண்டதும் சிவன் அவர்களுக்கு முன்னால் தோன்றி...
அர்ஜுனன் உங்கள் பக்தன். ஆகவே, உங்கள் பக்தன் தன் வாக்கைக் காப்பாற்ற முடியாத நிலையை நீங்கள் அவனுக்கு உண்டாக்கலாமா?
13
சிவன் சொன்னது சரிதான் என்று ஒப்புக்கொண்டு கிருஷ்ணர் சண்டையை நிறுத்தினார்.
